Registered as a NewsPaper

இலவச பிரதி

விலை ரூபா : 8.00


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி -11 | 25-06-2005 | சனிக்கிழமை | ஓசை 127

# பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் அரசு–புலிகள் கைச்சாத்திட்டனர்!

## புலிகள் தரப்பில் திட்டமிடல் செயலக பிரதிப்பணிப்பாளர் கைச்சாத்திட்டார்


(நமது செய்தியாளர்)

**சுனாமி அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு உடன்பாடு நேற்றுக்கைச்சாத்தாகியது. கொழும்பில் சிறிலங்கா அரசசார்பில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் செயலர் எம்.எஸ் ஜெயசிங்கவும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தரப்பில் விடுதலைப்புலிகளின் திட்டமிடல்செயலகப் பிரதிப்பணிப்பாளர் சண் முகலிங்கம் ரஞ்சன் அவர்களும் கைச்சாத்திட்டனர்.**

சுனாமி மனிதநேய உதவிகளுக் கான மீள் குடியமர்வு மீள்நிர்மாணம் அபிவிருத்திக்குமான பொதுக்கட்ட மைப்புத் தொடர்பான உடன்பாடு பலத்த இழுபறிக்குப் பின்னர் நேற்றுக் கைச்சாத்தாகியது.

நேற்று நண்பகலுக்குச் சற்று முன்பாக அரசின் சார்பாக புனர் வாழ்வு புனரமைப்பின் செயலர் எம்.எஸ் ஜெயசிங்க கையொப்பம் இட்ட ஆவணங்களுடன் சிறிலங்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வீரச்சாவு

இருவேறு சம்பவங்களில் போராளி ஒருவரும், தமிழீழ தேசியத் துணைப்படை வீரர் ஒருவரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். 02.12.1993 அன்று முல்லைக்கடற் பரப்பில் வைத்து சிறிலங்கா கடற் படையினரின் தாக்குதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந் துள்ளார்.

வீரவேங்கை-அருண்

(சித்திரவேல்-சண்முகலிங்கம் 6 ஆம் வட்டாரம் சேனையூர், த.மு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு வரைவை சமர்ப்பிக்கவிடாது பாராளுமன்றில் நேற்று ஜே.வி.பி குழப்பம்!

### -யூலை- 5 வரை பாராளுமன்றம் ஒத்திவைப்பு

பொதுக்கட்டமைப்பு வரைவு நேற்றுக்காலை பாராளுமன்றில் சமர்ப் பிக்கப்படவிருந்தவேளை ஜே.வி.பி யினர் பெரும் குழப்பம் விளைவித்தனர். இதன் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் பொதுக்கட்டமைப்பு விவாதம் இடம்பெறாமலேயே யூலை ஐந்தாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 8.30 மணிக்கு சபை அமர்வுகள் ஆரம்பித்து 15 நிமிடங்களில் அவைத்தலைவர் மைத்திரிபாலசிறிசேன பொதுக்கட்டமைப்பு வரைவினை அவையில் சமர்ப்பிக்கப்போவதாக அறிவித்ததையடுத்து அவரைச் சூழ்ந்து கொண்ட ஜே.வி.பி யினர் பெரும் குழப்பம் விளைவித்தனர். இதனையடுத்து அவை அமர்வுகளை சபாநாயகர் பத்து நிமிடங்களிற்கு ஒத்திவைத்தார். மீண்டும் சபை அமர்வுகள் ஆரம்பித்தபோது ஜே.வி.பி யினரின் எதிர்ப்பு நட வடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடைந்ததையடுத்து சபாநாயகர் அவை அமர்வுகளை எதிர்வரும் யூலை ஐந்தாம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தானதை எதிர்த்து நாடளாவிய ரீதியில் பேரினவாதிகள் போர்க்கொடி!

### -வன்முறைகளும் தலைதூக்கின



பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

நேற்றுக்காலை பாராளுமன்றத்திற்கு அருகே ஜே.வி.பி. யினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் நடத்திய ஆர்பாட்டத்தைக்கலைக்க படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினார்கள்.

நேற்றுக்காலை 11.30 மணி அளவில் கிரிபத்கொட சந்தியிலும், ஜே.வி.பி. ஆதரவாளர்கள் பொதுக்கட்டமைப் பிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர். அவர்களை கட்டுப்படுத்துவதற்காக சிறிலங்காப் பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டு பிர (12 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கையில் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு

பொதுக்கட்டமைப்பில் சிறிலங்கா அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்டுள்ள நிலையில் தெற் கில் ஏற்படக்கூடிய கொந்தளிப்பை தணிப்பதற்கு சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கை களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜே.வி.பி யினரும், ஹெல உறுமயவினரும் தலை நகரில் இயல்பு நிலையை குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என்பதால் கொழும்பின் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கொழும்பில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

21.03.1993 அன்று எதிர்பாராத வெடிவிபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை-லியோ (செல்வராசா-பாலசுப்பிரமணியம் 98 கொலனி தம்பலகாமம், த.முகவரி:-இல 6/7

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை ஐ.தே.க கொள்கையளவில் ஆதரிக்கும்

### –ஜீ.எல்.பீரிஸ் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை கொள்கை அள வில் ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக்கட்டமைப்பிற்கு ஐக்கிய தேசியக்கட்சி கொள்கையளவில் ஆதரவு வழங்குவதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீஎல்.பீரிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை விரைந்து ஆரம்பிக்க பொதுக்கட்டமைப்பு சூழல் வழிவகுக்க வேண்டும்

### –புதுடில்லியில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர்

பொதுக்கட்டமைப்பு நடை முறைப்படுத்துகின்ற சூழலிலேயே 2003 ஆம் ஆண்டு ஏப்ரலோடு முடங்கி நிற்கும் அமைதிப்பேச்சுக்களையும் விரைவாக மீண்டும் ஆரம்பிக்க வேண் டும் என்ற நோர்வேயின் பிரதி வெளி விவகாரத்துறை அமைச்சர் விதார் ஹெல்கேசன் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் ஊடகவியலாளர் களிடம் விதார் ஹெல்கேசன் கூறிய தாவது:

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தமாகும். யுத்தநிறுத்த ஒப்பந் தம் நடைமுறைக்கு வந்த பின்பு சிறி லங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப்படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். அவசர தேவைக்காக டிஜிற்றல் அல்பம் 24மணி நேரத்தில் செய்து வழங்குகின்றோம்.

யாழ். ஒளி K.S.R. Photos இல.05கனகபுரம்தெரு, கிளிநொசசி

(6294)

## தவறிவிட்டது

உருத்திரபுரத்தில் வசிக்கும் ஜே.நிர்மலராஜ் என்பவரது அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை என்பன கனகபுரம் மெடிக்ஸ்சுக்கும் துயிலுமில்லத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கு மாறு வேண்டப்படுகின்றனர்.(6301)

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

22.05.2005 அன்று மரிசலீன் திலீபன் என்பவரது தேசிய அடையாளஅட்டையும் **(771713262V),** அவரது சாரதி அனுமதிப்பத்திரமும் ஒரு தொகைப்பணமும் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் நெக்டெக், ஆனந்தபுரம், யாழ்.சாலை, கிளிநொச்சி. (6293)

## மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம் பாதம் உள்ள விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகவரி:- க.சிவானந்தம் க.திருநாவுக்கரசு (சோதிடர்)துர்க்கா வீதி.04ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு.(சி.12255)

## பெற்றுக்கொள்க

கடந்த ஏப்ரல் மாதம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவைகள் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினரால் நடாத்தப்பெற்ற சாரதி அனுமதிப்பத்திர செயன்முறை பரீட்சையின் போது வாகனங்களுக்கான காப்புறுதி மேற்கொண்டவர்களது காப்புறுதிப்பத்திரம் கிளி. மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. [சே]

## தமிழ்ழ மாணவர் அமைப்பால் நடாத்தப்படும்

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்

இலவச மழலைகள் கணினிப் பூங்காவின்

முதலாம் தொகுதி மாணவர்களின்

### சான்றிதழ் வழங்கும் விழா

26.06.2005 பி.ப 2.00 மணி

AWARDING CEREMONY

frist Batch of London sri kanaga Thurkkai Amman free kids computer park

கிளிநொச்சியில் முதல் முறையாக சிறுவர்களுக்கென நடாத்தப்பட்ட கணினிக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த இம் மழலைகளின் விழாவில் கலந்துகொண்டு மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் கண்டுகளிக்குமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(6300) நிர்வாகம்

## BRITISH BUSINESS SCHOOL

British BUSINESS SCHOOL — Where students come first.

KILI/CITY CAMPUS

BRITISH BUSINESS SCHOOL

Kandy Road, Kilinochchi

ஆரம்பம் 02.07.2005

3மாதம்

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு!

உங்கள் குறுகியவிடுமுறையினை பயனுள்ள விடுமுறையாக மாற்றுவதற்கு ஆங்கிலம்,கணினி ஆகிய நெறிகள் ஒரே இடத்தில்.





மேலதிக தொடர்புகளுக்கு அலுவலகத்துடன்.

(சி.12261)

குறிப்பு :- அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்களுக்கான விசேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## காணவில்லை

20.06.2005 அன்று புளியங்குளம் சோதனைச்சாவடியில் N.P.HY.6316 இலக்கமுடைய புத்தகம், தற்காலிக புத்தகம், வரி அட்டை அடங்கிய பாசலை யாராவது தவறுதலாக எடுத்துச்சென்றிருந்தால் தயவு செய்து ஈழநாதம் யாழ். பணிமனை அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைப்பவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்:- விவேகானந்தராசா துசியந்தன், 22 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P.0777286061.

(5382)

## பணிநிலை வேண்டுகை

01. கணனித்தட்டெழுத்தாளர் - 01
02. முதலியார் - 03
03. சுரு/தட்டெழுத்தாளர் - 03

**(வட்டக்கண்டல் நீதிமன்றம் மன்னார் தங்குமிடவசதியுடன்)**

04. காவலாளி - 03
05. சிற்றூழியர் - 02

தகைமைகள்:-

பணி01இற்கு க.பொ.தஉயர்தரத்தில்தேர்ச்சியடைந்திருப்பதுடன், M.S Office கற்கை நெறியில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

பணி 02இற்கு க.பொ.த.சா.த,க பொ.த உயர்தரத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

பணி 03இற்கு க.பொ.த.சா.தரத்தில் தேர்ச்சியடைந்திருப்பதுடன், சுரு/ தட்டெழுத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பணி 04,05இற்கு க.பொ.த.சா.தரதத்தில் தோற்றி இருக்க வேண்டும்.

அகவை:- 20-35 வரை

சம்பளம் நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பமுடிவுத்திகதி 01.07.2005

*விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-*

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
நீதிநிர்வாகத்துறை,
தமிழீழம்.

(2699)

# TENDER NOTICE

SEWALANKA FOUNDATION is a National Non -Government. Organization which has been in existence for the last Twelve years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by ethnic conflict across the entire country, and generously funded by;

**1. European commission Humanitarian Aid Office (ECHO)**

With the collaboration and assistance through the German Agro Action. (Deutsche Welthungerhilfe)

**Sealed Tenders are invited for the following supplles upto 6 th July 2005 at 2.00 p.m** and will be **opened** immediately.

The bidders or theri authorized representatives are invited to be present at the occasion

Necessary set of Tender documents for each supply could be collected from the following centers paying the amount specified against each item.

| | |
|---|---|
| 01 | Directors Field Office, Sewalanka Foundation, 51 VYravarkovil Road, Vavuniya |
| 02 | Sewalanka District Office, Kandy Road, Paranthan. |
| 03 | Sewalanka District Office, No.268/1,Central Road, Trincomalee. |
| 04 | Sewalanka District Office, No.250,Temple Road, Nallur, Jaffna. |
| 05 | Finance Division, Sewalanka Foundation, Head Office, 432A, Colombo Road Boralesgamuwa. |

Between 9.30a.m to 4.30 p.m during week days **from 25th June2005to 6th July 2005** paying required fee shown against each supply.

The quantity of items envisaged in the projects are as follow:

| | | |
|---|---|---|
| Seedlings | Coconut 10000, Casuarinas 5000, Cashew 8000 plants | Rs.500 |
| Fishery's equipment | 90 Sets of Catamaran boats and Nets | Rs.500 |
| Tool Kits | 1915 nos of Jungle Knife, Mattok, axe, hammer,pliers, pick axe, screw driver, Rake, Hand saw, 5745 Kg nails 28725 meters Rope | Rs.250 |
| Cement (50Kg Bags) | 5380 Bags | Rs.500 |
| Door with frames | 900 Nos | Rs.250 |
| Cement Blocks | 356460 Nos | Rs.500 |
| Cadjans | 112100 pairs | Rs.250 |
| Metro sheet 8 | 5580 Nos | Rs.250 |
| GI Pipes | 1"(2mm),2340 nos<br>1.25"-1180 nos<br>0.75" (2mm) 4130 nos (for 590 shelters) | Rs.250 |

These goods are to be delivered to SLF sites in Jaffna,Kilinochchi. and Mullaitivu

Prepared Tenders adhering to all the conditions specified in the Tender Documents should be sent by registered post addressed to:

The Chairman,
Tender Board,Tsunamy project office,
SEWALANKA FOUNDATION,
Thiru Nager Road,
Kilinochchi.

or may be deposited in to the Tender Box placed at the Accountant's office, at the above address to reach on or before **6th July 2005 at 2.00 p.m**

Late Tenders will not be accepted

Secretary,
Tender Board,Tsunamy project Office,
SEWALANKA FOUNDATION,
Thiru Nager Road,
Kilinochchi.

(சி.12233)

# சாவு அறிவித்தல்

## செல்வன் காராளசிங்கம் சசிரேந்தன் (சசி)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தை சொந்த இடமாகவும், திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், உடையார்கட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன். காராளசிங்கம் சசிரேந்தன் (சசி) (உடையார்கட்டு மகாவித்தியாலய வர்த்தகப்பிரிவு மாணவன்) அவர்கள் 24-06-2005 (நேற்று) அகாலசாவடைந்துள்ளார். அன்னார் காராளசிங்கம் மேரிறீற்றா ஆகியோரின் அருமைப் புதல்வனும், ஜீவானந்தன், ஜெயந்தன், சுயாத்தா, ஜெனீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதி கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- ஜீவாநந்தன். (சகோதரன்)

குரவயல்,
உடையார்கட்டு.

(6877)

# சீனாவில் வெள்ளப்பெருக்கு: மண்சரிவு இறந்தோர்தொகை 536 ஆக உயர்வு

(பீஜிங்)

**சீனாவில் கடந்த சில வாரமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 536 ஆக உயர்ந்துள்ளது.**

கடந்த சில நாட்களாக தென்சீனாவில் பெய்துவரும் கடும்மழை காரணமாக 97 பேர் பலியாகியுள்ளனர். 41 பேரைக் காண வில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெரு மழை காரணமாக குளங்கள் பெருக்கெடுத்ததுடன், மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளதென்று சின்குவா செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஆறு மாகாணங்களில் இருந்து 14 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். வெள்ளம் கிராமங்களை அடித்துச் செல்வதையும், மீட்புப் பணியாளர்கள், சிறுவர்களை மீட்டெடுக்கும் காட்சிகளையும் அரச தொலைக்காட்சி காண்பித்து வருகிறது.



தென்சீனாவில் வெள்ளம் காரணமாக பொருளாதாரத்தில் 11 மில்லியன் யென் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




*வால்ரர்றீட் இராணுவ முகாமினை வந்தடைந்த ஈராக்கியப் பிரதமர் இப்ராகிம் அல்–ஜபாரி கட்டளை அதிகாரி கென்னத் பாமரினால் வரவேற்கப்படுகின்றார்.*

## வெவ்வேறு கார்க்குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 18பேர்பலி; 48 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் மூன்று இடங்களில் கார்க்குண்டு வெடித்ததில் 18 பேர் பலியாகினர். 48 பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக் மீது அமெரிக்க கூட்டணி படைகள் போர் தொடுத்து சதாம் ஆட்சியை வீழ்த்தியபின் அங்கு கார்க் குண்டு வெடிப்புகள் தொடர்கதையாகிவிட்டன. சதாம் ஆதரவு கெரில்லாக்கள் நடத்தும் தற்கொலை படைத்தாக்குதலால் ஆயிரக்கணக்கா னவர்கள் பலியாகிவருகின்றனர். பாக்தாத்தில் ஷியா முஸ்லிம் கள் அதிகம் வசிக்கும் பகுதியில் உள்ள உணவு விடுதி, வாகன பட்டறை உள்ளிட்ட மூன்று இடங்களில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 18 பேர் பலியாயினர். 48 பேர் படுகாயமடைந்தனர்.



*பாக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் அமெரிக்கப் படையினர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர். இத் தாக்குதலில் ஆகக் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டனர்.*

## ஈராக்கின் புதிய பிரதமர் இப்ராகிம் அல்-ஜபாரி அமெரிக்கா பயணம்: புஷ்சை சந்திப்பார்

ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் விலக திகதி குறிப்பிடப்படவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளதை யடுத்து ஈராக் பிரதமர் இப்கிராம் அல்-ஜபாரி அமெரிக்க அதிபர் புஷ்சை வெள்ளைமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகக் கூறப்படுகிறது. அமெரிக்கா அங்கிருந்து வெளியேறினால் நாடு பயங்கரவாதிகளின் கைகளில் சென்றுவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு மட்டுமன்றி சிரியாவுக்கும் ஜபாரி பயணம் செய்ய எண்ணியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு அமெரிக்கா, ஈராக் மேலும் வெளிநாட்டுத் துருப்புக்களை தனது நாட்டுக்குள் அனுமதிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுவதை தெளிவுபடுத்துவதே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது; அமெரிக்கா ஈரானுடன் அணுவாயுதக்கொள்கையை வைத்திருப்பினும் பாக்தாத் எப் போதும் நல்லுறவை கொண்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



*ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் தரைமட்டமான நிலையில் காணப்படும் உணவு விடுதியின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.*

## விமானப்படை கோரமான குண்டுத் தாக்குதல்; சூடானில் மக்கள் இடம்பெயர்வு

சூடானிய விமானப்படை விமானங்கள் அந்நாட்டு கிளர்ச்சிக் காரர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் காரணமாக பல பொதுமக்கள் காயமடைந்தும் வீடுகளை விட்டு வெளியேறியிருப்பதாகவும் கூறப்படுகிறது. சூடானின் கிழக்குப் பகுதிதீவிரவாதிகள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

சூடான் இராணுவத்தினர் அங்கு தேடுதல் வேட்டை நடத்திய தாகவும், இது தீவிரவாதிகளால் முறியடிக்கப்பட்டதாகவும், இதனால் ஆத்திரம் கொண்ட படைத்தரப்பினரின் விமானங்கள் கண்மூடித்தனமாக குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தி யிருப்பதாகவும் கிளர்ச்சி வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களினால் சூடான், டோகார் வைத்தி யசாலைகள் நிரம்பி வழிவதாகவும், கிழக்குப் பிராந்திய தீவிரவாதக் குழுத்தலைவர் தெரிவிக்கிறார்.



ஏற்கனவே மேற்கு சூடானின் டார்பர் பகுதியிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சூடானில் சமாதானத்தை ஏற்படுத்தவே மேற்படி தாக்குதல்கள் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அங்கு அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குமிடையில் 15 வருடங்களாக முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த கூட்டணியின் ஒரு பகுதியினராகவே தீவிரவாதிகள் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவம் அதிரடித்தாக்குதல்; ஆப்கானில் 132 தீவிரவாதிகள் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆப்கான் கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் 132 தலிபான் தீவிரவாதிகள் பலியா கியுள்ளனர். இது கடந்த இரண்டு ஆண்டுகளில் தலிபான் இயக்கத்துக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் சனாதிபதி கர்சாய் தலைமையில் ஆட்சி நடந்து வருகிறது. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் சிறுசிறு பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருக்கும் தலிபான்கள் 'திடீர் திடீரென்று தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

வரும் செப்டெம்பர் மாதம் அங்கு பாராளுமன்றத்தேர்தல் நடக்கிறது. இதைச் சீர்குலைக்கும் நோக்கத்தோடு சமீப காலமாக தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல்களை முடுக்கி விட்டனர். மாவட்ட பொலிஸ் அதிகாரி உட்பட 31 பொலிஸ் காரர்களை பொது இடத்தில் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

இதைத்தொடர்ந்து தெற்கு ஆப்கானிஸ்தானில் காந்தஹார் பொலிஸ் துணைத்தலைவர் ஜெனரல் சலீம்கான் தலைமையில் 400 பொலிசார், அமெரிக்க போர் விமானங்கள் , இராணுவ உலங்கு வானூர்திகள் உதவியுடன் தாக்குதல் நடத்தினர்.

இந்தத்தாக்குதலில் 132 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் பெரும்பாலானவர்கள் இராணுவ உலங்கு வானூர்தி குண்டு வீசித்தாக்கியதில் பலியானார்கள். இறந்தவர்களில் மூன்று பேர் தலிபான் இயக்கத் தளபதிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உருது பேசும், பாகிஸ்தான் தீவிரவாதிகளும், செச்னியா தீவிரவாதிகள் இரண்டு பேரும் பலியானார்கள். 103 தீவிர வாதிகளின் உடல்களை இராணுவம் கைப்பற்றியது என்று உள்துறை அமைச்சரக செய்தித் தொடர்பாளர் மஷால் கூறினார்.





*மேற்குக் கரையில் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் அழிவடைந்த காரை அவதானிக்கும் சிறுவர்களையும், ஏரியல் சரோனின் காசாப் பகுதியைப் பிரிக்கும் திட்டத்திற்கெதிராக ஒரு விசேட தொழுகையினை அவதானிக்கும் யூதக் குடியிருப்பாளர்களையும் படங்களில் காணலாம்.*

## வடகொரிய அணுவாயுத பிரச்சினை; இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை

வடகொரியா சென்ற தென்கொரியக்குழுவினர் மேலதிக உணவு நிவாரணம் கிடைப்பதற்கு அனுமதியுடன் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

எனினும் அதன் அணுவாயுதப்பிரச்சினை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் ஆறு தரப்புப் பேச்சுக்கள் பற்றி வடகொரியா எதனையும் தெரிவிக்கவில்லை.

இந்தப்பிரச்சினை தொடர்பாக சீனா,ஜப்பான்,ரஷ்யா, தென் கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் வடகொரியா பேச்சுக் களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சரியான திகதியை நிர்ணயிக் குமாறு புஷ் நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது. இந்த ஆறுதரப்புப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான இராஜதந்திர அழுத் தத்தைப் பிரயோகிக்கும் முகமாக அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொண்டலிசாரைஸ் மீண்டும் அங்கு செல்ல வேண்டி யிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை

# கரும்புலிகள் நாள் தொடர்பாக கலந்துரையாடல்


(புதுக்குடியிருப்பு)

**புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கான கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை தெரிவும் வருகின்ற யூலை-5 கரும்புலிகள் நாள் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலும், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறை செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பா ளர் இ.பிறையாளன் தலைமையில் இடம் பெற்றது.**

இந்நிகழ்வில் கருத்துரைகளை முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துணைப் பொறுப்பாளர் சின் னண்னை ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவை புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து சிறப்புரையினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து யூலை-5 கரும்புலிகள் நாள் நிகழ்வை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பான வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு நிகழ்வு நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், கிராம சேவையாளர்கள், பொது அமைப்புக்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினர், கூட்டுறவு நிறுவ னங்களைச் சார்ந்தவர்கள் ஏனைய மக்கள் என கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (08)



நியாப் திட்டத்தினால் கனகபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நேற்று முன்தினம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி சு. உஷா சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டி பொதுநோக்கு மண்டபத்தினை திறந்து வைப்பதனை படத்தில் காணலாம். (படம்:- சோதி)

# காணி உத்தரவுப் பத்திரம் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

வடக்கு-கிழக்கு மாகாண காணி திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட மாவட்ட காணி ஆணையாளர் அடங்கிய துரித செயலணி குழுவினரால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் ஒன்பது கிராமசேவை அலுவலர் பிரிவில் நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் படி 351 விண்ணப்பங்களுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பெரியகுளம் 06, ஒதியமலை 14, மாங்குளம் 63, ஒட்டுசுட்டான் 21, சம்மளங்குளம் 27, முத்துவிநாயகபுரம் 59, கற்சிலைமடு 35, தட்டாமலை 63, பழம்பாசி 63 ஆகிய இடங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் காணி உத்தரவு பத்திரம் வழங்கல்தொடர்பாக ஆராயப்படவுள்ளது. எனவே இவ் விடயத்திற்குவருவோர்உரிய ஆவணங்களுடன் வருமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி சுபாசினி கந்தையா கேட்டுள்ளார். (05)




...ம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நேற்றைய தினம் மூன்றாம் ஆண்டினை ... செய்துள்ளது. மேற்படி மருத்துவ சேவையில் சிகிச்சை மேற்கொள்ள வருகை ... தரப்பட்ட நோயாளர்களை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

## கால் நடைகளிற்குத் தடுப்பூசி

(உடையார்கட்டு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை சுகாதார திணைக்களமும் இணைந்து கால் நடைகளுக்கு ஏற்படும் முன்னடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றல் நேற்று முன்தினம் விசுவமடுப் பிரதேசத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக முல்லை மாவட்டத்தில் விசுவமடுப் பிரதேசத்தில் தடுபபூசி ஏற்றல் நடைபெற்று வருவதால் கால் நடைவளர்ப்போர் இதனைப் பயன்படுத்தி பயனடையுமாறு விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக் கேட்டுள்ளார். (19)

## மகளிர் விடுதி திறப்புவிழா நிகழ்வு

ஜீ.ரி.சற்.நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தினரால் அமைக்கப்பட்ட உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி எதிர்வரும் 30.ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர் )

லண்டன் சிறி கனக துர்க்கை அம்மன் இலவச மழலைகள் பூங்காவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் இலவச மழலை கணினிப் பூங்காவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழா

(பூநகரி)

கடந்த 22 ஆம் திகதி புதன் கிழமை நியாப் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தின் திறப்புவிழா செல்விபுரம் கிராமத்தில் காலை 11.00 மணிக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் து.தர்மலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கை கமக்கார அமைப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஏற்ற தேசியக்கொடியை பூநகரி அரசியற் துறைப்பொறுப்பாளர் கலைக்குமரன் ஏற்றினார்.

தொடர்ந்து சிறப்புரைகளை நியாப் திட்ட இணைப்பாளர் பூநகரி பிரதேச செயலர், செல்லையாதீவு அ.த.க.பாடசாலை அதிபர் ஆகியோர் நிகழ்த்தினர். (34)

# அம்பலவன் பொக்கணையில் ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அம்பலவன் பொக்கணையில் யுனிசெவ் நிதியுதவியுடன் ஆரம்ப சுகாதார நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.



(படப்பிடிப்பு:- க. தவரட்ணம்)

கடந்த புதன்கிழமை கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் ச.தட்சணாமூர்த்தி தலைமையில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை மாவட்ட தாய்சேய் நல அதிகாரி வைத்திய கலாநிதி சுதர்சனும், யுனிசெவ் நிறுவன திட்ட இணைப்பாளர் வசந்தனும் ஏற்றி வைக்க பொதுச்சுடரை தமிழீழசுகாதாரசேவைகள் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி விக்கினேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தேசியக்கொடியை அம்பலவன் பொக்கணை பிரதேசப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழ் ஏற்றிவைக்க, பெயர்ப்பலகையை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் திரை நீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தினை முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து பரிசோதனைக் கூடத்தை தாய்சேய் நல பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சுதர்சன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அடுத்து தங்கும் அறையினை யுனிசெவ் நிறுவன திட்ட இணைப்பாளர் வசந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வகுப்பறையை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் திறந்து வைத்தார்.

இதனை அடுத்து வரவேற்புரையை அம்பலவன் பொக்கணை கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர் தவராசா நிகழ்த்த, ஆசியுரையை ஆனந்தபுரம். கிருஷ்ணர் ஆலய பிரதமகுரு இராமசாமி அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா, முல்லைத்தீவு மாவட்ட தாய்சேய் நலப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சுதர்சன், யுனிசெவ் நிறுவன திட்டஇணைப்பாளர் வசந்தன், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி விக்கினேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினார். இறுதியாக 'சுகம் தரும் சுகாதாரம்' நாடகம் இடம் பெற்றது. (08,20)

# சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'சுகம் தரும் சுகாதாரம்' நாடகம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்களால் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக முல்லைத்தீவின் பல பிரதேசங்களிலும் "சுகம் தரும் சுகாதாரம்" எனும் நாடகத்தினை நடாத்தி வருகின்றனர். இதனால் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

நாடகங்கள் வாயிலாக சுகாதார விழிப்புணர்வுகள் விரைவாக மக்களைச் சென்றடையும் என முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா தெரிவித்தார்.



அம்பலவன் பொக்கணை பகுதியில் 22. 06. 2005 அன்று இடம் பெற்ற இந் நாடகத்தின் ஒரு காட்சியையே படத்தில் காண்கின்றீர்கள் (படப்பிடிப்பு:- க. தவரட்ணம்)

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் தேவைப்பகுப்பாய்வுக் கருத்தரங்கு

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தின் தேவைப்பகுப்பாய்வு ஒன்று பாண்டியன்குளம் சமூகமேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் வடகாடு, ஒட்டறுத்தகுளம், கிடாய்பிடித்தகுளம் ஆகிய இடங்களில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது மக்களின் தேவைகளாக மலசல கூடம் அமைத்தல் குடிநீர்க் கிணறுகள் அமைத்தல் தொடர்பான கருத்துக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழக வலயப்பணிப்பாளர் நவநீதன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கினர். (24)

### -யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து-

# இராணுவத்தினரை வெளியேற்றக் கோரி பெருமெடுப்பில் போராட்டம் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பொதுமக்களது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றக்கோரி பெருமெடுப்பிலான போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் என இப் போராட்டங்களைப் பரவலாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொது அமைப்புக்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்தப் போராட்டங்கள் மூலம் யாழ்.குடாநாட்டில் இராணுவம் மற்றும் அரச நிர்வாகச் செயற்பாடுகள் என்பன முழுமையாக ஸ்தம்பிக்கச் செய் யப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பொது மக்களை இராணுவ நெருக்கடிக்குள் வைத்துக்கொண்டு எந்த ஒரு சமாதான முயற்சிகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாது என்ற உண்மையை உலக அரங்கில் பறைசாற்றும் முகமாக இந்தப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. (33)

# பேரினவாதிகளை கண்டித்து இன்று மாணவர்கள் பேரணி

நாட்டில் சமாதானத்திற்கு எதிராகவும், பொதுக்கட்டமைப்புக்கெதிராகவும் யுத்த கோஷமிடும் பௌத்த பேரினவாதத்தைக் கண்டித்து இன்று தென்மராட்சிப் பிரதேசத்தில் மாபெரும் கண்டன எழுச்சிப்போராட்டம் ஒன்றை இப்பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் முன்னெடுக்கவுள்ளதாக தென்மராட்சி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

தமிழ் மக்களின் மீது யுத்தத்தைத் திணிக்க முற்படுவது, எமது கைகளும் ஆயுதம் ஏந்துவதற்கு வழிவகுக்கும் என்றும் பௌத்த பேரினவாத வெறியானது எம்மை தமிழீழத்தாயகம் மீதான அவாவையும், தாகத்தையும் ஏற்படுத்தி நிற்கிறது என்றும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (28)

# உந்துருளியில் வந்தவர்கள் பட்டப்பகலில் பெண்ணிடம் திருட்டு

(தென்மராட்சி)

மட்டுவில் சிவன் கோயில் சந்தியில் வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் சங்கிலியை உந்துருளியில் வந்த இருவர் அறுத்துச்சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் 11.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட வயோதிபப் பெண்ணிடம் முகவரி விசாரிப்பது போல் நடித்த இருவரும் அவரது சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தப்பகுதியில் இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (28)

# சிறிலங்கா படையினருக்கு எதிராக தென்மராட்சியில் திங்கள் பேரணி

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கில் இராணுவத்தால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும், பொது மக்களின் வாழ்விடங்களில் இருந்து படையினரை உடனடியாக வெளியேறக் கோரி மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.

திங்கட்கிழமை உசன் கந்தசாமி ஆலய முன்றலில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி கொடிகாமம் பிரதேச செயலகம் வரை பேரணி நடைபெறவுள்ள தாகத் தென்மராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரி சங்கத் தின் தலைவர் கந்தசாமி அறிவித்துள்ளார். ஏற்கனவே திட்டமிட்டபடி எழுது மட்டுவாள் வடக்கு, கிழக்கு, விழுவளை, ஓட்டுவெளி, கரம்பகம, உசன் மிருசுவில், முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்துள்ள பெருமளவான மக்கள் இக்கண்டனப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (28)

# சிறப்பு முகாமைத்துவ கற்கை நெறி யாழில் இன்று ஆரம்ப நிகழ்வு

சிறப்பு முகாமைத்துவ கற்கைநெறி தொடக்க நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையினரால் நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கூட்டுறவு நுகர்ச்சி சமாசத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச்சபை தலைவர் ப.கனகலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் அரச அதிபர் கே.கணேஸ் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், சி.கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி கற்கை நெறியின் விரிவுரையினை யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சே.கனகசபாபதி ஆரம்பித்துவைக்கவுள்ளார்.(சு)

# கடலில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வல்வெட்டித்துறை கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இச்சம் பவத்தில் வல்வெட்டித்துறை பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கணேசரட் ணம் பிறேம்நாத் (வயது-19) என்பவரே உயிரிழந்தவராவார்.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனான பிரஸ்தாப இளைஞன் பகுதி நேரமாக கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்.

இவர் கடற்றொழிலுக்கு செல்வதற்காக கட்டுமரத்தினைத் தயார்படுத்தி கடலின் ஆழப்பகுதியில் கட்டிவிட்டு தனது நண்பர்களுடன் கரைநோக்கி நீந்தி வந்துகொண்டிருந்தபோதே இவர் கடலில் மூழ்கி உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரஸ்தாப இளைஞன் தற்பொழுது நடைபெற்று வரும் உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் தோற்றிப் பரீட்சை எழுதியிருப்பதாகவும் மற்றைய ஒரு பாடத்துக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இருப்பவர் என்றும் கூறப்படுகிறது. (33)

# விளையாட்டு வீரர்களுக்கு உதவி செய்யக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தென்கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறுவுள்ள விளையாட்டில் கலந்து கொள்ள யாழ் மாவட்டத்தில் இருந்து செல்வோருக்காக பண உதவிகளை எதிர் பார்ப்பதாக யாழ் செயலக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

விமானச் சீட்டு 72500 ரூபாவாகும் அது தவிர ஏனைய பிரயாணச செலவுகள் 10.000 ரூபாவரை ஏற்படலாம் எனினும் எமது உறவுகள் வெளிநாடு சென்று இவ்விளையாட்டில் கலந்து கொள்வது எமக்கு பெருமை தரும் விடயம்.

எனவே இவர்களின் பிரயாணச் செலவுக்கான நிதியினை யாழ் மாவட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்தும் தனவந்தர்களிடமிருந்தும் எதிர்பார்ப்பதாக யாழ் செயலக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் தெரிவித்தார். (சு)

# காரைநகர் கடற்றொழிலாளர் மீது கடற்படையினர் தாக்குதல்

### -மூவர் படுகாயம்-கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு

காரைநகர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர் மூவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி சிங்களக் கடற்படை தாக்கியுள்ளது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் காரை நகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் முறையிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் காரைநகர் வடகடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது பீரங்கிப் படகில் வந்த கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

மேலும் வள்ளத்தில் இருந்த கம்பத்தை வெட்டி அதனால் மீனவர்களைத் தாக்கி மிரட்டினர் என்றும் கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

காரைநகர் மத்தியைச் சேர்ந்த பொன்னையா, இராசையா பரந்தாமன், மார்க்கண்டு தனபாலன் ஆகிய மூவருமே சிங்கள இராணுவத்தின் காடைத் தாக்குதலுக்கு உள்ளாகியவர்களாவர்.

கொடுந்தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் மூவரும் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கம் ஊடாக காரைநகர் சிறிலங்கா பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (33)

# பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே புனர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்ளலாம்

### -யாழ் அரச அதிபர் கே.கணேஸ்

(யாழ்ப்பாணம்)

பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள் முடியும் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் வலியுறுத்தியுள்ளார்.

சுனாமி அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வுப்பணிகளில் இடம் பெறக்கூடிய மோசடிகள், வீண்விரயங்கள் காலதாமதங்கள் என்பவற்றை தவிர்ப்பதற்காகவே இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் கே.கணேஸ் மேலும் கூறியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற பகுதிகளில் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அரச அதிபர் இது பற்றிக் கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணிக்கு 'யாழ்மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் 25 இற்கும் மேற்பட்ட புனர்வாழ்வளிக்கும் அமைப்புக்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் அரச அதிபர் புனர்வாழ்வு அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார். (33)

## தனியான பிரதேச செயலகம் அமைப்பது குறித்து தென்மராட்சி கிழக்கில் விசேட கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்குக்கென தனியான பிரதேச செயலகம் அமைப்பது தொடர்பான விசேட கூட்டம், வரும் 28ஆம் திகதி சாவகச்சேரி, பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகம் அமைப்பதற்கான விசேட செயலணிக்குழு இத்தகவலை அறிவித்துள்ளது.

இருபத்திஎட்டு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி கிழக்கு பகுதியின், தேவை கருதியும் பல வருடகாலமாக பின்தங்கியுள்ள இப்பிதேசங்கள் மீட்சி பெறவேண்டும் என்ற நோக்குடன் பிரதேச செயலகம் மிக விரைவில் அமைக்கப்பட தாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உள்ளதாக தென்மராட்சி கிழக்கு விசேட செயலணிக் குழு அறிவித்துள்ளது. (28)

# யாழ்.இல் வீதிச்சமிக்ஞை குறியீடுகளில் விளம்பரம் ஒட்டுவோர் மீது நடவடிக்கை

### -அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வீதிச் சமிக்ஞை குறியீடுகளை மறைத்து விளம்பரங்கள் ஒட்டுவோர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வீதி அபி விருத்தி அதிகார சபையினரும், பொலிசாரும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் விளம்பரங்களை ஒட்டுவோர் தமது சுவரொட்டிகளை வீதிச்சமிக்ஞைக் குறியீட்டுப் பலகைகளின் மீது ஒட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனால் யாழ்மாவட் டத்தில் உள்ள அநேகமான வீதி சமிக்ஞைக் குறியீட்டுப் பலகைகள் விளம்பரப் பலகைகளாகியுள்ளன.

இதனால் வாகன ஓட்டுநர்களும், வீதிச்சமிக்ஞைக் குறியீட்டுப் பலகைகளைக் கவனித்து வாகனம் ஓட்ட முடியாத நிலைமை உள்ளதைச் சுட்டிக் காட்டியே இது பற்றி அரசாங்க அதிபர் கே.கணேஸ் வலியுறுத்தியுள்ளார்.(33)

# உவர் நீர்தடுப்புத்திட்டத்திற்கென 98 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உவர்நீர் தடுப்புத்திட்டத்தினை மேற்கொள்வதற்கென 98 மில்லியன்ரூபா நிதி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நன்னீர் மாசடைந்து உவர்நீரின் பரம்பல் அதிகரித்துள்ளது. இதனால் இங்கு பெரும் குடிநீர் பிரச்சினைகள் தோன்றத் தொடங்கியுள்ளன.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு நன்னீர் நிலைகள் உவர் நீராவதைத்தடுப்பதற்கான திட்டங்களை அமுல் செய்ய வேண்டிய அவசிப்பாடு தோன்றியுள்ளது. இந்தத்திட்டங்களை மேற்கொள்வதற்காக 98 மில்லியன் ரூபா தேவைப்படுவதால் இந்நிதியை சர்வதேச நிறுவனங்களிடம் தாம் கோரியிருப்பதாக அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (33)

# உடல் நடுக்க வியாதியை கட்டுப்படுத்தும் விற்றமின் - ஈ

பார்க்கின்சன் எனப்படும் நடுக்க வியாதியை தடுக்க விட்டமின் -ஈ சத்து நிரம்பிய உணவுகளை உண்பது சிறந்தது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். மிதமானது முதல் அதிக அளவு வரை விட்டமின் -ஈ சத்து நிறைந்த உணவு சாப்பிடுபவர்களுக்கு பார்க்கின்சன் நோய்க்கான வாய்ப்பு கணிசமாக குறைவாக இருப்பது ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் விட்டமின்-சி மற்றும் கரோட்டின் சத்துக்கள் இதுபோன்ற எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. விட்டமின்-ஈ சத்து முட்டைக்கோவா போன்ற இலைகள் நிறைந்த காய்கறிகள், தாவர எண்ணெய்கள், மாம்பழம் ஆகியவற்றில் தாராளமாகவுள்ளது.

பார்க்கின்சன் நோயை பொறுத்தவரை குணப்படுத்த இயலாத ஒன்றாக உள்ளது. பெரும்பாலும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் இந்நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். மூளையில் டோபோமைன் என்ற இரசாயனம் சுரக்கும் கலங்கள் நிறைய உள்ளன. மூளை கலங்களுடன் தகவல் பரிமாற்றம சீரான முறையில் நடைபெறுவதற்கு இந்த இரசாயனம் அவசியம் தேவை. இந்நிலையில் ஏதோ ஒரு காரணத்தால் இந்தக் கலங்கள் குறையும் போது பார்க்கின்சன் நோய் உண்டாகிறது. டோபோமைன் போதுமான அளவுக்கு இல்லாததால் நரம்பு மண்டல செயற்பாடும் பாதிக்கப்படும். விளைவு உதடு, கைகள் கால்கள் உள்ளிட்ட உடலின் சில பாகங்கள் தானாகவே நடுங்க ஆரம்பிக்கும்.

டோபோமைன் சுரக்கும் கலங்கள் குறைவதற்குக் காரணம் என்ன? என்பது இதுவரை தெரியவில்லை.

# திராட்சைக் கொட்டைகளிலிருந்து வயிற்றுப் புண்ணுக்கு மருந்து

திராட்சைக் கொட்டைகளில் இருந்து எடுக்கப்படும் கூட்டுப்பொருள் வயிற்றுப் புண்ணை (அல்சர்) குணப்படுத்தும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

வழக்கம்போல திராட்சை பழக் கொட்டைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட கூட்டுப் பொருள் வயிற்றுப்புண்ணால் பாதிக்கப்பட்ட எலிகளுக்கு கொடுக்கப்பட்டது. அப்போது இரைப்பையில் அளவுக்கு மீறி சுரக்கும் இரைப்பை நீர் அளவு குறைந்தது தெரிந்தது. இந்த நீர் அளவுக்கதிகமாக இருக்கும் போது வயிற்று திசுக்களுக்கு எரிச்சல் ஏற்படுத்தி அவற்றை நாளடைவில் சேதப்படுத்தும் இந்தக் கூட்டுப் பொருளைச் சாப்பிடும்போது மேலும் வயிற்றுப்புண்ணும் சிறுத்து விடுகிறது இதுதவிர வயிற்றுப் பகுதியில் ரத்த ஓட்டம் அதிகரிப்பதால் வயிற்றுப் புண்கள் குணமாக ஆரம்பிக்கும்.

எனினும் திராட்சை பழக் கொட்டைகளை சாப்பிட்டால் அல்சர் குணமாகும் என்று சொல்லும் அளவுக்கு விஞ்ஞானிகளுக்கு இன்னும் ஆதாரம் கிடைக்கவில்லை அதேசமயம் தொடர்ந்து நடந்து வரும் ஆய்வுகளில் இதற்கான உறுதியான ஆதாரங்கள் நிச்சயம் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.


# இலத்திரனியல் பூட்டு



திருட்டுத் திறப்பைப் பயன்படுத்தி வீடுகளைக் கொள்ளையடிப் போரிடமிருந்து பாதுகாக்க புதிய வகைப் பூட்டுத்திறப்பு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஒருவர் தனது வீட்டுக் கதவுக்கு இலத்திரனியல் பூட்டொன்றை பொருத்துவதால் இந்தப் பாதுகாப்புக் கிடைக்கிறது.

அவ்வாறான பூட்டை பாவிப்பதனால் அதற்குப் பொருத்தமான மட்டையை அதற்குள் செலுத்துவது மட்டுமே அவரது பணியாகும் அவ்வாறு செலுத்தும் போது காட்டில் குறிப்பிடும் இரகசிய எண்களும் பூட்டில் இருக்கும் இரகசிய எண்களும் பொருந்தினால் கதவு திறக்கப்படும் எனவே இனி போலித்திறப்புகளுக்கு வேலையிருக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கணினிமயமாக்கப்பட்ட வாகனம்



படத்தில் காணப்படுவது புதிய வகை வாகனமாகும். உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட இது "புதிய நைட்றைடர்" என அழைக்கப்படுகிறது. நிறத்தை மாற்றவும் கூரையை அகற்றவும் நவீனடிஜிடல் இசையைக் கேட்டு ரசிக்கவும் ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டது. இவ் வாகனத்தில் இருவர் பயணம் செய்யலாம். தற்போது இது 20 ஆயிரம் ஸ்ரேலிங்பவுணுக்கு விற்பனையாகிவருகிறது. இது கணினிமயமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வைரத்தை முதலில் பயன்படுத்தியவர்கள் யார்?

தற்காலத்திலேயே வைரத்தைப் பயன்படுத்தும் முறையை சீனர்கள் அறிந்திருந்தனர். அதாவது உலகில் மற்றவர்களுக்கு இந்த யோசனை தோன்றுவதற்கு இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் இதைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சீன மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவினர் நடத்திய ஆராய்ச்சியில் இது தெரியவந்துள்ளது. இதுவரை குவார்ட்ஸ் என்ற பொருளைப் பயன்படுத்தி சீனர்கள் வைரத்துக்கு பாலிஷ் செய்தார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால் கோரண்டம் என்ற பொருளை பயன்படுத்தும் முறையை அப்போது சீனர்கள் அறிந்திருந்தார்கள் என்று இப்போது தெரிய வந்துள்ளது.

# வளிமண்டல அடர்த்தி வீதம் குறையும் ஆபத்து

புவிவெப்பமடைதல் தொடர்பாக பிரிட்டனிலுள்ள சதர்ம்டன் பல்கலைக்கழகம் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அப்பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானியான பேராசிரியர் ஹய்லூயிஸ்தெரிவிக்கும் கருத்துப்படி வாயு மண்டலத்தி லுள்ள காபனீரொட்சைட்டின் மூலம் வளிமண்டலத்தின் மேற்பரப்புக் குளிர்ச்சியடைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

புவிக்குக் கிடைக்கும் சூரியக் கதிர்கள் புவியில் பட்டு நீங்கிச் செல்லாமல் மீண்டும் புவியில் தெறித்து விழுவதால் வளிமண்டலத்தின் மேற்பரப்பு குளிர்வடைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் புவிக்கு அப்பால் அனுப்பப்பட்ட செய்மதி ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படிஇது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் பிரதான தாக்கம் வளிமண்டலத்தின் அடர்த்தி குறைவடைவதாகும். எனினும் வளிமண்டலம் அடர்த்தி குறைவதால் விண்வெளியில் பயணிக்கும் ஆய்வுக் கலம் ஒன்று நீண்டகாலம் விண்ணில் தரித்திருப்பதற்கு உதவும் என்று கூறப்படுகிறது. தற்போது விண் வெளிக்கு அனுப்பப்படும் கலங்களுக்காக செலவிடப்படும் அதிக தொகை இதன்காரணமாகக் குறையலாம் என்று கூறப்படுகிறது காரணம் இலகுரக உலோகங்கள் அதற்காக பாவிக் கப்படுவதாகவும் அதிக பணம் விரய மாவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

எனினும் மேற்படி வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக புவியிலுள்ள தாவரங்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. காரணம் உயிரினங்களுக்குத் தேவைப்படும் வளியின் அளவு குறைந்து விடும் அச்சம் காணப்படுகிறது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனைக் கவனத்தில் எடுக்காமல் விடுவது விண் வெளிப் பயணம் மேற்கொள்வோருக்கு நல்ல பயனளிக்குமெனக் கூறும் அவ் ஆய்வாளர்கள் வளிமண்டலத்தில் எதிர்காலத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டு இரண்டு மூன்று தசாப்தங்களில் வளி மண்டலத்தின் அடர்த்தி 40 வீதத்தால் குறைவடையுமென்றும் தெரிவிக்கின்றனர்.

# இதய நோயைக் கண்டறிய புதுவிதமான சோதனை

இதய நோயைத்தடுப்பதற்கான ஒரு புதுவிதமான சோதனை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இச்சோதனைக்கு மயோ கார்டியல் பெர்பியூஷன் சோதனை என்று பெயராகும்.இதன்மூலம் இரத்த ஓட்டத்தை துல்லியமாகக் கணக்கிட்டு விடலாம். கதிரியக்க மருந்து ஒன்றை ஊசி மூலம் செலுத்துவதனால் இதய தசைக்கு போதுமான இரத்தம் கிடைக்கிறதா என்பதைக் கண்டறிந்து இதய நோயுள்ளதா, எதிர்காலத்தில் இதய நோய்வரவாய்ப்புள்ளதா? இதய ரத்தக் குழாய் வழியாக இரத்தம் தங்கு தடையின்றி பாய்கிறதா போன்றவற்றை அளவீடு செய்துவிடலாம். இதய பாதிப்பைக் கண்டறியும் மற்ற சோதனை முறையிலிந்து முற்றிலும் மாறுபட்ட இப்புதிய சோதனை முறை இப்போது இந்தியாவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

# உயரத்தை அதிகரிக்க புதிய ஹார்மோன் மருந்து

உயரத்தை அதிகரிக்கும் புதிய ஹார்மோன் மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மருந்து வழக்கமான மருந்துகளைக் காட்டிலும் 50 சதவீதம் சிறந்த பலனைத்தருவதாக வாஷிங்டனில் உள்ள யூ.எல்.ஏ.சி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். வளர்ச்சி ஹர்மோன்களில் காணப்படும் குறைபாடு காரணமாக பிறவியிலேயே குட்டையாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்தப் ஐ.ஜி.எப் (IGF)சிகிச்சை மூலம் குறைபாடு அகன்று குழந்தைகளுக்கு உயரம்கிடைக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வளர்ச்சி ஹார்மோனில் இன்சூலினில் இருப்பதைப் போல ஒரு சீரம் இருக்கிறது.மேற்படி புதிய ஹார்மோன் மருந்து இந்தக் குறிப்பிட்ட சீரத்தைக் குறைவைத்துத்தான் செயற்படும். இதன் மூலம் வளர்ச்சிக் ஹார்மோனின் இயற்கையான செயற்பாடுகளில் மாற்றம் உண்டாகி வளர்ச்சி கிடைக்கும்.

ஹார்மோன் வளர்ச்சி குறைபாட்டுக்கு சிகிச்சை அளிப்பதில் இந்த ஐ.ஜீ.எப் ஹார்மோன் முக்கிய காரணியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகிறார்கள். மேற்படி வளர்ச்சி ஹார்மோன், ஐ.ஜீஎப் அளவைக் கணிசமாக அதிகரித்து வழக்கமான முறைகளில் அல்லாமல், குறிப்பிடத்தக்க அளவுக்கு உயரம் கிடைக்க வழி கோலும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# செயற்கை கருத்தரிப்பின் மூலம் பிறக்கும் குழந்தைகள் உயரமாக இருக்கும்

ஐ.வி.எப் எனப்படும் செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் பிறக்கும் குழந்தைகள், இயற்கையான முறையில் கருத்தரித்துப் பிறக்கும் குழந்தைகளைக்காட்டிலும் உயரமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். அதுபோல எச்.டி.எல் எனப்படும் நல்ல கொழுப்பும் அவர்களுக்கு தான் அதிகமாகவுள்ளது. பல்வேறு வகையான இருதய நோய் களுக்குக் காரணமாக ரைகிளிசரைடுகளும் இவர்களிடம் குறைவாகவேயுள்ளது. ஐ.வி.எப் முறையில் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் காட்டிலும், பெண் குழந்தைகள் மிகவும் உயரமாக இருப்பார்கள். அதேசமயம் இன்சூலின் மற்றும் இதர விஷயங்களில் எந்தவித்தியாசமும் இல்லை.

ஐ.வி.எச் சிகிச்சை மூலம் உருவாகும் குழந்தைகள், சாதாரணமாக இயற்கையான கருத்தரப்பில் உருவாகும் குழந்தைகளைக் காட்டிலும், ஒரு வாரம் முன்னதாகவே பிறந்துவிடுகிறார்கள். இதனால் அவர்களின் எடை குறைவாகவேஇருக்கிறது. ஐ.வி.எப் பெண் குழந்தைகளாக இருக்கும்பட்சத்தில் அவர்கள் பருவத்துக்கு வருவதில்எந்தப் பாதிப்பும் இருக்காது.ஐ.வி.எப் சிகிச்சையில், உடல் வளர்ச்சி மற்றும் கொழுப்பை ஒழுங்குபடுத்தும் மரபணுக்களில் சீர்திருத்தங்கள் நடப்பதுதான் இதற்குக் காரணம்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியரின் நிரந்தர நியமனம்

# வலயக்கல்விப்பணிப்பாளர்களால் தாமதமாகிறது

## -கல்வி அமைச்சின் செயலர் தாராடிமெல் தெரிவிப்பு

(திருகோணமலை)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது அவர்கள் பற்றிக் கோரப்பட்ட விபரங்களை வடக்கு கிழக்கில் உள்ள வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அனுப்பத்தவறியுள்ளதால் தாமதமாவதாக கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடிமெல் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

1.10.2001இற்கு முன்பு 180 தினங்கள் தொடர்ந்து பணிபுரிந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு அவ்வாறான ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை மாகாண கல்வி அமைச்சிடமிருந்து கோரப்பட்டது. இன்றும் அப்பட்டியல் கிடைக்கவில்லை. அப்பட்டியலைத் தயாரிப்பதில் வலயக்கல்வித் திணைக்கள மட்டத்தில் காட்டப்படும் தாமதத்தினால் தான் இந் நியமனம் செய்யப்படாதுள்ளது. பட்டியல் கிடைத்ததும் நியமனங்கள் வழங்கப்படும் என்று செயலாளர் தாராடிமெல் சங்கத்தூதுக்குழுவிற்கு உறுதியளித்தார்.

உறுதியளிக்கப்பட்ட கல்வி அமைச்சில் தமிழ்மொழிக் கல்விப்பிரிவு இன்னும் உருவாக்கப் படவில்லை என்பதை சங்கத்தூதுக் குழு செயலாளருக்குச் சுட்டிக்காட்டியது. தகுதிவாய்ந்த அதிகாரிகள் இல்லாமையே இதற்குக் காரணம் என்று பதிலளித்த தாராடிமெல் இலங்கைக் கல்வி நிர்வாகசேவை வகுப்பு-2ஐச் சேர்ந்த இரண்டு பேரைச் சிபார்சு செய்யும்படி சங்கத்தூதுக் குழுவை அவர் கேட்டுக் கொண்டார். தமிழ்மொழிப் பிரிவு ஒன்று கல்வி அமைச்சில் தனியாக இயங்கும் போது தமிழ்மொழி மூலப் பாடப்புத்தகங்கள் தரமான முறையில் பிழைகள் மற்றும் தவறு களின்றி அச்சிட்டு வழங்கக்கூடிய நிலை உருவாகும் என்றும் செயலாளர் தாராடிமெல் கூறினார். தலைவர் என்.இராஜநாதன், செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். (25)

# ஆழிப்பேரலை அனர்த்தத்தால் கல்முனையில்

# ஐயாயிரம் பேருக்கு உளப்பாதிப்பு

(கல்முனை)

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக கல்முனையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சுமார் 5,000 பேர் பல்வேறு உளப் பாதிப்புகளுக்கு இலக்காகியிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

உளப்பாதிப்புகளுக்கு இலக்கானவர்களில் பெருமளவானோர் அகதிமுகாம்களில் வாழ்வதாகவும் அவர்களுக்குத்தேவையான மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கல்முனை வைத்திய சாலையின் மனநல பராமரிப்பாளர்என்.குமுதினி தெரிவித்துள்ளார்.

பிரதேசத்திலிருக்கும் முகாம்களுக்குச் சென்று வைத்திய பரிசோதனை மேற்கொள்வதற்கும் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கென வருபவர்களை பரிசோதிப்பதற்கும் போதிய வைத்தியர்கள் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

உளப்பாதிப்புகளுக்கு இலக்காகி முகாம்களில் வாழும் சிலர் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகவும் ஆண்களில் பலர் மதுவிற்கு அடிமையாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினரால்

# க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட க.பொ.த.சாதாரணதர மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினர் விசேட செயற்றிட்டத்தினை முல்லைத்தீவில் நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

இதன்போது விசேட வகுப்புக்கள் நடத்தப்பட்டு அதில் பாடக்குறிப்புகள் வழங்குவதோடு, பரீட்சை வினாத்தாளையும் வழங்கி வருகின்றனர். முல்லைத்தீவு மகாவித்தியாலயம், செம்மலை மகாவித்தியாலயம், அளம்பில் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம், அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இத்திட்டத்தை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (20)

# பணியாளர்கள் இல்லாமையினால்

# மக்களின் தேவைகள் நிறைவேற்ற முடியாதுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இயங்கிவரும் மக்கள் வங்கி, இலங்கைவங்கி என்பவற்றிற்கு பணியாளர்கள் இல்லாமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதன்காரணமாக மக்களுக்கு முழுமையாக அவர்களது தேவைகளை நிறைவேற்ற முடியாதிருப்பதாக முல்லை.மாவட்ட அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வங்கிகளின் தலைமைப்பீடங்களுடன் உரையாடியதாகவும் உடனடியாக அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யவுள்ளதாக, தெரிவித் துள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி முல்லைத்தீவில் ஒவ்வொருநாளும் காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணிவரை சேவை செய்வதாகவும் மக்கள் வங்கி சுனாமி நிதி வழங்கியதுடன் அங்கு சேவை செய்ய முன்வரவில்லையெனவும், இதற்குப் பணியாளர்கள் பற்றாக்குறையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (20)

# பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மூடப்படமாட்டாது

# கல்வி அமைச்சின் செயலாளர் வாக்குறுதி

(திருகோணமலை)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்படமாட்டாது என்றும் அதனை வேலணை மத்திய கல்லூரியுடன் இணைத்து தொடர்ந்து நடத்துவதுபற்றி ஆராயப்படுமமென்று கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடிமெல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என்.இராமநாதன், பொதுச்செயலாளர் த.மகாசிவம் ஆகியோரைக் கொண்ட தூதுக்குழு கல்வியமைச்சின் செயலாளர் தாராடிமெல்லை கடந்த சனிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

அப்போது "பலாலி ஆசிரியர் கலாசாலையை மூட அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது. இதனை நிறுத்தவேண்டும். பலாலி மகரகம ஆகிய இடங்களிலேயே விசேட ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் செயற்படுகின்றன. மாவட்ட மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்காமல் மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு டாக்டர் தாராடிமெல்லுக்குச் சுட்டிக்காட்டியது.

குறைந்தது இரண்டாயிரத்து ஐந்நூறு தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. 2005இல் மேலும் 4000 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கும் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடுவது தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு அநீதி செய்வதாக அமையும் என்றும் தூதுக்குழு தெரிவித்தது. அதனை ஏற்றுக்கொண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை மூடுவதில்லை என்று உறுதியளித்த செயலாளர் டாக்டர் தாராடிமெல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடர்ந்து இயங்குவதற்கு ஏதுவாக அதனை வேலணை மத்திய கல்லூரியுடன் இணைப்பது குறித்து ஜூலை முதலாம் திகதி கல்வி அமைச்சில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபர், வேலணை மத்தியகல்லூரி அதிபர் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஆகியோர் பங்கு பற்றும் மாநாடு ஒன்றில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (25)

# சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவும்

# கப்டன் சுவீந்திரனின் நினைவு நாளும்

(முழங்காவில்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் முழங்காவில்- இரணைமாதா நகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவும், கப்டன் சுவீந்திரனின் நினைவுநாளும், சிறார்களின் கலை விழாவும், கடந்த 16ஆம் திகதி பூங்கா நிர்வாகி திருமதி நிலாமதி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பூங்குன்றன் மாஸ்ரர் , தமிழீழ ஊரகவளர்ச்சிப் பணியகத்தைச் சேர்ந்த விபுலன், போராளி காந்தி, கிளி.குமா பூங்கா நிர்வாகி ஏ.பிரான்சிஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளரும், சிறுவர் பூங்காக்களின் பணிப்பாளருமான கந்தன் ஏற்றி வைத்தார்.

கப்டன் சுவீந்திரனின் திருவுருவப் படத்திற்கு போராளி நிசாந்தன் ஈகச்சுடரேற்ற, கிளி.மாவட்ட ஊரகவளர்ச்சிப்பணி பொறுப்பாளர் ஈழம் மலர் மாலை அணிவித்தார். ஆசியுரையை பூங்குன்றன் மாஸ்ரரும், சிறப்புரையை விபுலன் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். வரவேற்புரையை பூங்கா சிறுமி செல்வி பவதாரணி சிவபாலன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகள் பேச்சு, கவிதை, வினா விடை என்பன இடம்பெற்றன. இறுதியாக அலோசியஸ்வாஸ் நன்றியுரையை வழங்கினார். இதேவேளை ஏழாம் ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு இரு கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பதினெட்டாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது. அடிக்கல்லை தமிழீழ ஊரகவளர்ச்சி பணி பொறுப்பாளர் கந்தன் நாட்டினார்.

இந்நிகழ்வில் பூங்கா பணியாளர்கள், கிளி.இரணைதீவு றோ.க.த.அதிபர் சென்மேரிஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான

# வதிவிடப்பயிற்சி வகுப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடனும் முன்பள்ளி மேம்பாட்டு கல்வி நிலையத்தினரால் முன்பள்ளி ஆசிரியாகளுக்கான வதிவிடப்பயிற்சி வகுப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த 18ஆம் திகதி முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக ஒன்றுகூடல் மண்டபத்தில் துணுக்காய் வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் க.தயாநிதியின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. (05)

# உடையார்கட்டு மூங்கிலாறில் பொதுக்கிணறுகள்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மூங்கிலாறில் பொதுக்கிணறுகள் அமைப்பதற்கான ஆரம்பவைபவம் நேற்று முன்தினம் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகின.

நூற்றுக்கணக்கான மக்கள் கிணறு வெட்டும் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர். இதில் கிணறு வெட்டும் ஆரம்பப் பணியை உடையார்கட்டுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழரசன் ஆரம்பித்துவைத்தார்.

இப் பொதுக்கிணறு அமைக்கும் பணி போரூட்,யு.என்.எச்.சி.ஆர் நிதி உதவியுடன் சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (19)

# கடற்படையினரால்

# டிங்கி படகு கைப்பற்றப்பட்டது

(மன்னார்)

மன்னாரில் ஜெலிக்னைட் குச்சிகள் மற்றும் வெடிக்க வைக்கும் உபகரணங்கள் இருந்த டிங்கி படகொன்றை நேற்று முன்தினம் சிறிலங்காக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் சவுத்பார் கடற்பிரதேசத்தில் ஜெலிக்னைட் குச்சிகள் 390 வெடிக்கவைக்கும் குச்சிகள் 5, ஜி.பி.எஸ். இயந்திரம் ஒன்று மற்றும் 55 லீற்றர் மண்ணெண்ணெயுடன் டிங்கிப் படகொன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும். அத்துடன் அந்தப் படகில் இருந்த சேகு அன்டன் என்பவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் கடற்படையினர் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். மன்னார் பொலிசார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (18)

# வீரமுரசு நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் கூழாமுறிப்பு கிராமத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முல்லை மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறையினரால் நடாத்தப்பட்ட இவ் வீரமுரசு நிகழ்வு கூழாமுறிப்பு ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை அதிபர் சர்வானந்தம் ஏற்றிவைக்க மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கான சுடரினை பெற்றோரும், உறவினரும் ஏற்றி, மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

இதில் சமகால கருத்துரைகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர். (05)

# ஆழிப்பேரலைத் தாக்கத்தின்பின் இல.இல் எயிட்ஸ் நோய்த்தாக்கம் அதிகரிப்பு

## ஐ.நாடுகள் சபை தெரிவிப்பு

ஆழிப்பேரலையால் இலங்கை தாக்கப்பட்ட பின்னர் எயிட்ஸ் நோய் தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருலட்சம்பேர் தற்போதும் தற்காலிக தங்குமிடங்களில் அடிப்படை சுகாதார வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் இவர்களுடைய வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே எயிட்ஸ் நோய் இவர்கள் மத்தியில் வேகமாக பரவி வருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது எயிட்ஸ் நோயாளி கண்டு பிடிக்கப்பட்டது முதல் இதுவரை 649 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 190 பேர் உயிரிழந்திருப்பதாகவும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் இந்த எண்ணிக்கையை விட பல மடங்கு அதிக எண்ணிக்கையான எயிட்ஸ் நோயாளர்கள் இலங்கையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையை எயிட்ஸ்நோயிலிருந்து மீட்கும் வகையில் எயிட்ஸ்சுக்கு எதிராக போராடுவோம் திட்டம் ஒன்று நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆசிய பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளிலும் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. 1987 முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கையில் 3600 எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக கருதப்பட்டது. இதில் இனம் காணப்பட்டிருப்பது 591 பேர் மட்டுமே இந்தப் பிராந்தியத்தில் வேகமாகப் பரவிவரும் இந்த ஆபத்திலிருந்து இலங்கையை பாதுகாப்பதற்கே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக வர்த்தகர் மனித உரிமைமீறல் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக வர்த்தகரொருவர் மனித உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நாடக நடிகையொருவரிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஜீ. பந்துலசேன என்ற வர்த்தகர் காலந்தாழ்த்தியதாகக் கூறி விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்ட வர்த்தகரை துன்புறுத்தியதுடன் அச்சுறுத்தியுள்ளர்.

போர் காலத்தில் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப் படையினர் இவ்வாறு பொதுமக்களை அச்சுறுத்துவது மனித உரிமை மீறல் செயலெனக் குற்றஞ்சாட்டியுள்ள அந்த வர்த்தகர் விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சேனாரட்ண பொலிஸ் பொறுப்பதிகாரி கட்டுகம்பொல, சிரேஷ்ட பொறுப்பதிகாரி குமார, விசேட அதிரடிப்படையின் பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் லியூகே ஆகியோர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் அதிகாரம் விசேடஅதிரடிப்படையினருக்கு இல்லையென வர்த்தகர் ஜீ.பந்துலசேன தாக்கல் செய்துள்ள வழக்கில் தெரிவித்துள்ளார்.

எனவே தனக்கேற்பட்ட பாதிப்புக்கு ஐந்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் அந்த மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வெலிக்கந்தையில் மூன்று பெண்கள் மீது 4இராணுவத்தினர் பாலியல் வல்லுறவு

வெலிக்கந்த முதலாம் கட்டையில் கல்லுடைக்கும் பெண்கள் மூவர் நான்கு இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று பெண்களின் வீட்டிற்கு கடந்த 17ஆம்திகதி இரவு நான்கு இராணுவத்தினர் ஆயுதங்களுடன் சென்று அப்பெண்களின் கணவன்மார்களின் கைகள் இரண்டையும் கயிற்றினால் கட்டிவைத்து விட்டு அந்தப்பெண்கள் மூவரையும் இந்த நான்கு இராணுவத்தினரும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். இப்பெண்களுக்கு 35 வயது தொடக்கம் 40 வயது இருக்கும் என பொலிசார் தெரிவித்துள்ளனர். பாலியல்வல்லுறவுச் சம்பவத்தில் இரண்டு லான்ஸ் கோப்ரல்மார்களும் அடக்கியுள்ளனர்.

# சுனாமி நிவாரணங்களை பகிர்ந்தளிக்க அரசிடம் சரியான செயற்றிட்டமில்லை

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)

சுனாமி நிவாரணங்களை முறையாகப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசாங்கத்திடம் சிறந்த செயற்றிட்டமொன்று இல்லையென புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். தங்காலை, குடாவெலப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசாங்கத்திடம் சிறந்த செயற்றிட்டம் இல்லாததால் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக விக்கிரமபாகு கருணாரட்ண குறிப்பிட்டார். நிதியுதவிகளைப் பகிர்ந்தளிக்கும் தரப்பினருக்கு அவை சரியானமுறையில் சென்றடைகிறதா என்று கேள்வியெழுப்பும் உரிமை இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதிக்கு நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லையெனக் குறிப்பிட்ட அவர் நிவாரணப் பகிர்வு தொடர்பாக அரசாங்கத்திடம் சிறந்த திட்டமொன்று இல்லாமையே இதற்குக் காரணமெனவும் கூறினார்.

# முஸ்லிம்களுக்கு தனித்தரப்புக் கோரி காத்தான்குடியில் மாணவர் ஆர்ப்பாட்டம்

ஆழிப்பேரலை நிவாரணக் கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித் தரப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம் முற்பகல் காத்தான் குடி பிரதேச பாடசாலைமாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பொது விளையாட்டரங்கில் ஒன்று கூடிய மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கிருந்து பிரதான வீதி வழியாக தெற்கு எல்லை வரை பேரணியாக நகர்ந்து பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை பிரதேச செயலாளர் ஏ.சீ. எம்.மலீலிடம் கையளித்தனர்.

சிறிலங்கா சனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர், விடுதலைப்புலிகளின் தலைவர்மற்றும் நோர்வே அனுசரணையாளர்கள்,வெளிநாட்டு தூதரகங்களுக்குரிய மனுக்களும் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

சர்வதேச சமூகம், விடுதலைப் புலிகள் இயக்கம், சிறிலங்கா அரசு ஆகியவை முஸ்லிம் அரசியல் தலைமையுடன் பேச வேண்டும்.

முஸ்லிம் தனியான தேசிய இனம் என்கின்ற அடிப்படையில் சமத்துவ தனித்தரப்பு வேண்டும் தனித்தரப்புக கிடைக்காவிட்டால் சிறுபான்மை முஸ்லிம் அமைச்சர்கள் இராஜினாமா செய்ய வேண்டும்.

எல்லா நிலைகளிலும் முஸ்லிம்களுக்கு சமத்துவ தரப்பு அளிக்க வேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு வாசக அட்டைகளை ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

# பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிட முஸ்லிம்களுக்கு சந்தர்ப்பமில்லை

### -அமைச்சுப்பதவியை இராஜினாமாச்செய்ய பேரியல் அஷ்ரப் முடிவு

ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பில் முஸ்லிம்கள் கைச்சாத்திடப்படுவதற்கான சந்தாப்பமில்லை என நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் கடந்த புதன்கிழமை அமைச்சர் பேரியல் அஷ்ரப்பிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் தரப்புகள் தொடர்பில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே அதில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்றும் விதார் ஹெல்கேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பை அடுத்து தனது அமைச்சு பதவியை இராஜினாமாச் செய்வதற்கு பேரியல் அஷ்ரப் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

எனினும் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்து அரசாங்கத்தின் அறிவித்தல் வெளியாகும் வரை அமைதி காப்பது என்றும் பேரியல் அஷ்ரப் தரப்பு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டில் பலமான தேசிய அமைப்பு உருவாக்கக்கோருகிறார் ரத்தினதேரர்

(கொழும்பு)

நாடு தற்பொழுது பெரும் சிக்கலான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளபடியால் கடந்த கால கசப்பான சம்பவங்களை மறுத்து நாட்டில் பலமான தேசிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றாளர்கள் அனைவரையும் எமது அமைப்பில் இணைந்து செயற்படுவதற்கு வருமாறு ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற அங்கத்தவர் அத்துரலி யரத்தின தேரர் கடந்த புதன்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கையின் தற்போதைய நிலைக்கு அரசின் பங்காளிகளே பொறுப்பு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளே பொறுப்புக்கூறவேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற அக்கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

# 2ஆம் திகதி முதல் மனிதச்சங்கிலிப்போராட்டம்

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நாட்டில் சனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டுமெனக்கோரி மக்கள் சங்கிலிப்போராட்டத்தை நிறுத்தாமல் தொடர்ந்து நாடுமுழுவதிலும் நடத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

அடுத்தமாதம் இரண்டாம்திகதி மாத்தறைதேவேந்திரமுனை விஸ்ணு ஆலயத்தில் ஆரம்பிக்க இருக்கும் இந்தப் போராட்டம் தினந்தோறும் பிரதேச அரச அதிபர் செயலக மட்டத்தில் நடத்தப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.


## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க சுதந்திரபுரம் கிளையின்

## கிளைப்பொதுச்சபைக் கூட்டம்-2005.07.02

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்தின் சுதந்திரபுரம் கிளையின் கிளைப் பொதுச்சபைக் கூட்டம் முன்பு குறிப்பிட்ட திகதியில் நடைபெறாத காரணத்தினால் இக்கூட்டம் எதிர்வரும் 2005.07.02ஆம்திகதி சனிக்கிழமை காலை9.30 மணிக்கு சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே வாக்களிக்க தகைமையுடைய ஒவ்வொருவரும் இக்கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுத்து கிளைக்குழு உறுப்பினர்களையும் பொதுச் சபைபேராளர்களையும் தெரிவு செய்து தமது ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு.த.பத்மாஙந்தன்,
தேர்தல் உத்தியோகத்தர்,
மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம்.

(சி-12260)



## தவறிவிட்டது

*22.06.2005 அன்று சின்னான் இராஜேந்திரன் என்பவரின் கடவுச்சிட்டை (பாஸ் போட்டென் மார்) ஒன்று முகமாலை இராணுவசோதனை நிலையத்தில் தவறிவிட்டது. இதனைக்கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள நந்தவனத்தில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.*

தகவல்
சி.உதயகுமார்

(6297)

# திருவொற்றியூரில் மீண்டும் பாரிய தீ விபத்து; 2200 சுனாமிக்குடியிருப்புக்கள் நாசம்; ஒருவர் பலி!

(சென்னை)

**திருவொற்றியூரில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற பாரிய தீ விபத்தில் 2,200 சுனாமி குடியிருப்புக்கள் எரிந்து நாசமாகின. இளைஞர் ஒருவர் உடல்கருகிப் பலியானார்.**

கடந்த டிசம்பர் மாதம் சுனாமிப்பேரலைகள் தாக்கியபோது காசிமேடு, ராயபுரம் பகுதிகளைச் சேர்ந்த 2700 கடலோர வாழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். வீடுகளை இழந்துதவித்த அவர்களுக்கு திருவொற்றியூர் கார்கில் நகர் மற்றும் வெற்றி நகரில் தற்காலிக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன.

திருவொற்றியூர் நகர சபைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட அந்த வீடுகள் தார் கூரைத்தகடுகளால் மூடப்பட்டிருந்தது. இந்த வீடுகளில் வசித்தவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டன.

கார்கில் நகர் அருகே நிரந்தர வீடுகள் கட்ட நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் நடந்தன. அப்போது அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில் சுனாமி குடியிருப்புக்களில் தீ விபத்துக்கள் மர்மமான முறையில் ஏற்பட்டன.

கடந்த 14 ஆம் திகதி முதன் முதலாக சுனாமி குடியிருப்பு அருகில் உள்ள குடிசைகளில் தீப் பிடித்தது. அதில் 54 வீடுகள் எரிந்து சாம்பலானது. மறுநாள் சுனாமி தற்காலிக வீடுகளில் தீப்பிடித்தது. அப்போது 504 வீடுகள் தீயில் எரிந்து நாசமாயின.

கடந்த 16 ஆம் திகதி மூன்றாவது முறையாக ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு வீடுகள் எரிந்தன. இந்த தீ விபத்துக்களில் வீடுகளை இழந்தவர்கள் ஆங்காங்கே தற்காலிக கொட்டகைகளில் தங்கியுள்ளனர். அவர்களை மீண்டும் வேதனைக்குள்ளாக்கும் வகையில் நேற்று முன்தினம் நள்ளிரவு மீண்டும் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

நள்ளிரவு 1.20 மணிளவில் டி பிளாக்கில் ஒருவீட்டில் தீ பிடித்தது. அந்த சமயத்தில் காற்று அதிகமாக வீசிய காரணத்தால் வேகமாகப்பரவியது. சில நிமிடங்களில் 2,200 வீடுகளும் தீப்பிடித்து எரிந்தன.

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் தீபரவி இருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் அலறினார்கள். கையில் கிடைத்த உடமைகளை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். கைக்குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு பெண்கள் அழுதபடி உயிர்தப்ப அங்குமிங்குமாக ஓடினார்கள்.

இந்தத் தீ விபத்துச் சம்பவங்கள் குறித்து பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



## சேதுசமுத்திரத்திட்டத்திற்காக இராமேஸ்வரத்தில் வெளிச்சவீடு

(சென்னை)

சேது சமுத்திரத்திட்டக் கால்வாய் மூலம் செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்ட இராமேஸ்வரத்தில் கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஓலைக்குடா பகுதியில் இந்தப் பிரமாண்ட கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. இந்தக் கலங்கரை விளக்கம் 90 அடி உயரம் உள்ளது.

சிவப்பு வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கும் இந்தக் கலங்கரை விளக்கம் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலங்கரை விளக்கத்தின் உச்சியில் பெரிய விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த விளக்குகளில் இருந்து 20 மைல் தூரத்துக்கு ஒளிவீசும். இதன் அடியில் தொழிலாளர்கள் தங்க மூன்று அறைகளும் உள்ளன.

இராமேஸ்வரம்பகுதியில் ஏற்கனவே ஒரு கலங்கரை விளக்கம் உள்ளது. பாம்பனில்உள்ள இது ஏற்கனவே செயற்பட்டு வருகிறது.

இதேபோல இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் உள்ள கலங்கரை விளக்கமும் செயற்பட்டுவருகிறது.

தொண்டியில் உள்ள பாசிப் பட்டிணம் பகுதியிலும் ஒரு கலங்கரை விளக்கம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. விரைவில் இதன் தொடக்க விழா நடைபெறும்.

தமிழ் நாட்டில் நான்கு கலங்கரை விளக்கங்கள் உள்ள ஒரே மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சேது சமுத்திரக் கால்வாயில் செல்லும் கப்பல்களுக்கு இவை வழிகாட்டும்.

சேது சமுத்திரத் திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக மதுரை-தனுஸ்கோடி நெடுஞ்சாலை நான்கு வழிச்சாலையாக சீரமைக்கப்படுகிறது. 900 கோடி ரூபாசெலவில் இந்தப் பணிகள் நடைபெறுகிறது.

# பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து தமிழகத்தில் தொடர் போராட்டங்கள்

(சென்னை)

பெற்றோல் டீசல் விலை உயர்வைக் கண்டித்து தமிழகத்தில் தொடர் போராட்டம் நடத்த பல்வேறு அமைப்புக்களும் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

திங்கட்கிழமை புகையிரத மறியல போராட்டத்திற்கான ஏற்பாட்டினை பாரதிய ஜனதாக்கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

செவ்வாய்க்கிழமை பாரவூர்தி உரிமையாளர் சம்மேளனம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

மாநில பாரவூர்தி உரிமையாளர் சம்மேளனத் தலைவர் செங்கோடன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மத்திய அரசு அடிக்கடி டீசல் விலையினை உயர்த்துவதால் அதிகமாகப் பாதிக்கப்படுவது எமது தொழிலாகும். கடந்தசில ஆண்டுகளாக எமது தொழில் மிகவும் நலிவடைந்து வருகிறது. இருப்பினும் பாரவூர்தி உரிமையாளர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தேசிய அனுமதி வரி, காலாண்டு வரி. உற்பத்தி வரி போன்ற வரிகளைச் செலுத்தி வருகின்றனர். அத்தோடு டீசல் மீதான செஸ், சுங்கவரி போன்ற வரிகளையும் செலுத்துகின்றோம்.

தனியார் நிதிநிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு குறைந்த வட்டியில் வாகனக் கடன் தருவதால தேவைக்கும் அதிகமான பாரவூர்திகள் வாங்கப்பட்டுவிட்டன. இதனால தொழில் கிடைக்காமல் குறைந்த வாடகைக்கு பாரவூர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தற்போது டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இது மேலும் எங்களது தொழிலைப் பாதிக்கும். எனவே இந்தவிலை உயர்வுக்கு மாநில பாரவூர்திகள் உரிமையாளர் சம்மேளனத்தின் சார்பில் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க இந்தியாவில் புதிய சட்டம்

(புதுடில்லி)

இந்தியாவில் குடும்பத்தில் பெண் களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகளைத் தடுக்க புதிய சட்டம் கொண்டுவர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.


பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட் டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது பொருளாதாரம், பாலியல் மற்றும் மனோரீதியாகத் துன்பம் இழைத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் வழிவகுக்கிறது.

## பிரணாப் முகர்ஜி அமெரிக்கா பயணம்

(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன்சிங்கின் அமெரிக்கப் பயணத்தைத் தொடர்ந்து, பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இன்று அமெரிக்காவிற்குச் செல்கிறார். இவர் அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை அமெரிக்காவில் தங்கியிருப்பார்.



குஜராத் மாநிலத்தில் இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் ஒட்டகத்தில் சென்று பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் வீரர்கள்.

# ஜெயலலிதாவின் இரு மோசடி வழக்குகள்; விசாரிப்பது தொடர்பாக திங்கள் தீர்ப்பு



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான இரு முக்கிய வழக்குகளை ஒன்றாக விசாரிப்பது தொடர்பான வழக்கு நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா மீது சொத்துக் குவிப்பு வழக்கு, லண்டன் விடுதி வழக்கு என இரு வழக்குகள் தொடரப்பட்டு பெங்களூர் நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது. இரு வழக்குகளையும் ஒரே வழக்காக விசாரிக்க வேண்டும் என்று ஜெயலலிதாவின் வழக்கறிஞர் ஜோதி பெங்களூர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார்.

இதற்கிடையே சென்னை உயர் நீதிமன்றில் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு பதில் அளித்து சமீபத்தில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதில் இரு வழக்குகளையும் தனித்தனியாக விசாரிப்பதா? சேர்த்து விசாரிப்பதா? என்பதை பெங்களூர் தனி நீதிமன்றம் முடிவு செய்யும் என்றும் கூறியிருந்தது.

இதைத் தொடர்ந்து பெங்களூர் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தீர்ப்புக் கூறப்படுவதாக இருந்தது. அன்றையதினம் ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணி ஜோதி ஆஜராகி வாதாடினார். தொடர்ந்து தினகரன் தரப்பில் மூத்த வழக்கறிஞா ஆஜராவதற்கு இரண்டு நாள் அவகாசம் கேட்கப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதி பச்சாபுரே நேற்று தினகரன் சட்டத்தரணி ஆஜராகி வாதாட வேண்டும் என்று உத்தர விட்டார்.

இன்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது தினகரன் தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஆஜராகவில்லை. சட்டத்தரணி நரேந்திரா ஆஜராகி மூத்த சட்டத்தரணி குமார் ஆஜராவதற்கு இரண்டு நாள் அவகாசம் வேண்டும் என்று கேட் டார்.

இதைத் தொடர்ந்து நீதிபதி பச்சாபுரே பிறப்பித்த உத்தரவில் ஜெயலலிதா மீதான இரு வழக்குகளையும் ஒரே வழக்காக விசாரிப்பதா? தனித்தனி யாக விசாரிப்பதா? என்பது குறித்து வருகிற 27 ஆம் திகதி தீர்ப்பு வழங் கப்படும்.

அதற்குள் தினகரன் தரப்பு சட்டத்தரணி ஆஜராகி விளக்கத்தைத் தெரிவிக்கலாம். முன்னதாக அவர் அரசு சட்டத்தரணி ஆச்சார்யாவுடன் கலந்துபேசி விளக்கத்தைத் தெ விக்க வேண்டும்எனத் தெரிவித்த

# தென்கொரிய சமாதான விளையாட்டுவிழா யாழ்.மாவட்ட வீரவீராங்கனைகள் பங்கேற்பு

சர்வதேச மதங்களுக்கிடையிலான சமாதான விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டத்தில் இருந்து இவ்வருடம் வீரவீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி விளையாட்டு விழா வருடா வருடம் தென்கொரியாவில் நடைபெற்று வருகின்றது. கடந்த வருடம் நடைபெற்ற போட்டிகளிலும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும், ஒரு வீராங்கனையும் பங்குகொண்டிருந்தனர்.

இவர்களுள் இருவர் காட்டிய திறமையின் காரணமாகவும், வெளிநாடு சென்று விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள மென்மேலும் வாய்ப்புக்கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக் காரணமாக பல இளம் வீரர்கள் மெய்வல்லுநர் பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த வருடம் போல் இந்த வருடமும் மேற்குறித்த விளையாட்டு விழா எதிர்வரும் யூலை மாதம் 22ஆம் திகதி முதல் தென்கொரியாவில் நடைபெறவுள்ளது. இதற்காக தொடர் பயிற்சியில் உள்ள யாழ். மாவட்ட வீர வீராங்கனைகள் கொண்டிருக்கும் திறமையின் அடிப்படையில் இரண்டு வீராங்கனைகளும், ஏழு வீரர்களும், ஒரு அணிப் பொறுப்பாளருமாக மொத்தம் பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று இவ் விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தும் ஒருவர் செல்லவுள்ளதாக அறிய முடிகின்றது. (சு)


## மேற்.தீவுக்கு சிக்கல்

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் முன்னர் ஏற்பட்ட ஒப்பந்த பிணக்குகள் காரணமாக அவ்வணியின் சிறிலங்காவுக்கான சுற்றுப் பயணம் கேள்விக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வருகை தரவுள்ள அணி வீரர்கள் 13 பேரில் அணித்தலைவர் சந்தர்போல் உள்ளிட்ட மூன்று வீரர்கள் மட்டுமே ஒப்பந்தத்தில் கையெழுத்திட இணங்கியுள்ளனர். கடந்த வருடம் அணியிலிருந்து ஏழு வீரர்கள் மற்றொரு விளம்பர ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதால் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த இழுபறி நிலைக்கு தீர்வு காண்பதற்கு போதிய அவகாசம் கிரிக்கெட் சபைக்கு இல்லாதிருப்பதால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வீரர்கள் வருகை தருவது சாத்தியமில்லை என்றும் இது உறுதியாகும் பட்சத்தில் தற்போது சிறிலங்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு போட்டிகளில் பங்கேற்கும் அந்நாட்டு 'ஏ' அணி வீரர்களே இந்தியாவும், சிறிலங்காவும் பங்கேற்கும் முக்கோண போட்டித் தொடரில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நட்வெட்ஸ் முக்கோண ஒரு நாள் போட்டி அவுஸ்திரேலியாவுக்கு முதல் வெற்றி





நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான முக்கோண ஒரு நாள் போட்டியின் லீக் போட்டி ஒன்றில் அவுஸ்திரேலிய அணி 57 ஓட்டங்களால் இங்கிலாந்தைத் தோற்கடித்தது.


செஸ்டர் லீ ஸ்டீரிட் நகரில் நேற்று முன்தினம் பகலிரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அவுஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் அவுஸ்திரேலியா ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சைமன்ஸ் 73 ஓட்டங்களையும், மார்ட்டின் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிளின்டொப் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. டேரன் கவ் அதிக பட்சமாக 45 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் பிரட்லீ, மெக்ராத், ஹொக் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். மற்றுமொரு லீக் போட்டியில் அவுஸ்திரேலியா பங்களாதேஷ் அணியை இன்று எதிர்கொள்கிறது.



## அரையிறுதிக்கு உலக சம்பியன் பிரேசில் தகுதி கோல் அடிப்படையில் வாய்ப்பையிழந்தது ஜப்பான்



கான்படரேஷன் கால்பந்து அரையிறுதிக்கு உலக சம்பியன் பிரேசில் தகுதி பெற்றது. கோல் அடிப்படையில் வாய்ப்பு இழந்தது ஆசிய சம்பியன் ஜப்பான்.


ஜேர்மனியில் கான்படரேஷன் கோப்பைக்கான கால்பந்து தொடர் நடக்கிறது. கடந்த புதனன்று நடந்த முக்கியமான போட்டியில் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள பிரேசில் ஜப்பான் அணிகள் மோதின. இதில் வென்றால் தான் அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற இக்கட்டான நிலையில் பிரேசில் களமிறங்கியது. ஆட்டத்தில் பத்தாவது நிமிடத்தில் இளம் வீரர் ராபின்கோ அபார கோல் அடிக்க பிரேசில் விரைவாக முன்னிலை பெற்றது. 27ஆவது நிமிடத்தில் ஜப்பானின் சுன்சிகி நகமுரா பதிலடி கொடுத்தார். இதற்கு பின் பிரேசில் வீரர்கள் தாக்குதல் பாணியிலான ஆட்டத்துக்கு மாறினர். 32ஆவது நிமிடத்தில் ரொனால்டினோ ஒரு கோல் அடித்து வலுவான முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது பாதியிலும் பிரேசில் ஆதிக்கம் செலுத்த, எளிதான வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆட்டம் முடிய [illegible] நிமிடம் இருக்கும்போது ஜப்பானுக்கு வாய்ப்பு கிடைத்தது. நகமுரா அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. திரும்பி வந்த பந்தை அப்படியே அடித்த மசாஷி ஒகுரா அருமையான கோல் ஆக்கினார். இதையடுத்து போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. இரு அணிகளும் தலா நான்கு புள்ளிகளைப் பெற்றன. ஆனால், கோல் அடிப்படையில் பிரேசில் (ஐந்து கோல்) அரையிறுதிக்கு முன்னேறியது. ஜப்பான் (நான்கு கோல்) தனது பிரிவில் மூன்றாவது இடத்துடன் ஆறுதல் தேடியது.

பிராங்பர்ட்டில் நடந்த மற்றொரு 'பி' பிரிவு போட்டியில் மெக்சிக்கோ, கிரீஸ் அணிகள் மோதின. இரு அணிகளும் கடுமையாகப் போராடியபோதும் கோல் அடிக்க இயலவில்லை. கிட்டத்தட்ட 30 வாய்ப்புக்கள் வீணடிக்கப்பட்டன. கோல் கீப்பர்கள் சிறப்பாக செயற்பட்டு ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர். இறுதியில் போட்டி கோல் எதுவும் அடிக்கப்படாமல் (0-0) சமனில் முடிந்தது. ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்ற மெக்சிக்கோ தனது பிரிவில் முதல் இடம்பெற்றது. கடைசி இடத்தைப் பெற்ற ஐரோப்பிய சம்பியன் கிரீஸ் தொடரில் ஒரு கோல் கூட அடிக்காமல் ஏமாற்றம் அளித்தது.



## இங்கிலாந்து-சிறிலங்கா அணிகள் கலந்து கொள்ளும் 20 ஓவர் போட்டி



இங்கிலாந்தின் றோஸ்போல் மைதானத்தில் அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகள் பங்குகொண்ட 20 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பதால் அடுத்த வருடம் இங்கிலாந்து-சிறிலங்கா அணிகள் பங்குகொள்ளும் 20 ஓவர் கொண்ட சர்வதேசப் போட்டியொன்றை நடத்த சர்வதேச கிரிக்கெட்சபை திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி போட்டியை கண்டுகளிக்க 15ஆயிரம் பேர் திரண்டிருந்ததாகவும் இதனை 20 ஆயிரம் பேர் இருந்து கண்டுகளிக்கும் வகையில் வசதிகள் மேற்கொள்ளவும் இரவுப் போட்டிகளுக்காக பிரகாஷமான மின் குமிழ்களும் பொருத்தப்படவிருப்பதாக றோஸ்போல் மைதான பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதற்காக ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டு

## முன்பள்ளி வி.போட்டி

சாவகச்சேரிக் கோட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் காலை சங்கத்தானை கந்தசாமி ஆலய முன்றலில் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிகளில் சாவகச்சேரிக் கோட்டத்திலுள்ள 53 முன்பள்ளிகளைச் சேர்ந்த 200 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளதாக தென்மராட்சிக் கோட்ட முன்பள்ளிகளின் இயக்குநர் பாக்கியராஜா தெரிவித்துள்ளார்.





(படங்கள்: ஆன்சிலீன்)

□ □ □

உடையார்கட்டு வடக்கு கலைமகள் முன்பள்ளி சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா வரும் 29ஆம் திகதி 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவை சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமும், பெற்றோரும் இணைந்து சிறப்பாக நிகழ்த்தவுள்ளதாக கலைமகள் முன்பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (18,28, 19)

## வருடாந்த விளையாட்டு விழா

முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வரும் குமுழமுனை மாவீரர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 3.30 மணியளவில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொது ஈகச்சுடரினை குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் சோதிகாந்தன், பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளர் ஜெயசுதா ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை குமுழமுனை வலயப் பொறுப்பாளர் யாழிசை ஏற்றினார். முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனக் கொடியினை நிறுவன வெளிக்கள அலுவலர் பிரகலா ஏற்றினார்.


முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியர் கிஸ்ணகுமாரி ஏற்றினார். மங்கள விளக்கினை நிறுவன இணைப்பாளர் சுரேஸ்குமார் ஏற்றிவைக்க, ஒலிம்பிக் தீபத்தினை குமுழமுனை மகாவித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் காந்திச்செல்வன் ஏற்றினார். தொடர்ந்து வரவேற்புரையினை முன்பள்ளி ஆசிரியர் வழங்க, ஆசியுரையினை பெண்கள் மேம்பாட்டு முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் கோகிலா வழங்கினார். விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று சிறுவர்களின் இசையும், அசைவும் வினோத உடையும் இடம்பெற்றதுடன், சிறுவர்களிற்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (20)



முல்லை. மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினரால் நடாத்தப்பட்ட முன்பள்ளிகளுக்கான விளையாட்டு விழா கடந்த 21ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் ஒட்டுசுட்டான் சிவன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

முல்லை. மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் திட்ட மேற்பார்வையாளர் இ. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் நாவலர் முன்பள்ளியும், சம்மளங்குளம் பாரதி முன்பள்ளியும் கலந்துகொண்டன. (05)



### சிந்தனைக்கு

இந்த உலகில் அநீதியும்- அடிமைத் தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத் தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-06-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## கைச்சாத்தின் முன்பே கலகம்!

சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதா? இல்லையா? என்பது ஊர்ஜிதம் செய்யப்படும் முன்னரே பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு வரைவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி செய்த குழப்பம் காரணமாக பாராளுமன்றம் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி இத்தகையதொரு குழப்பத்தைச்செய்யும் என்பது ஏற் கனவே எதிர்பார்க்கப்பட்டதொன்றுதான். ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறியதுமே தன்னால் இயன்றளவு பொதுக்கட்டமைப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எனத் தெரிந்தே இருந்தது.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு, கைச்சாத்து, அதன் அமுலாக்கம் என்பன தொடர்பாகப் பல வாதப் பிரதிவாதங்கள் ஏற்கனவே நடை பெற்ற வண்ணமிருந்தன. அரசாங்கம் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுமா? இல்லையா? என்பது தொடர்பான கருத் துக்கணிப்புக்களைக் கூடச் சில ஊடகங்கள் நடத்திக் கொண்டி ருந்தன. சரியான பதில் கூறும் அதிர்ஷ்டசாலிக்குப் பணப்பரி சில்களும் அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் மறியல் போராட்டங்களில் இருந்து வன்முறைப் போராட்டங்கள் வரை யில் இருக்கலாம் என எதிர்பார்க்க வாய்ப்புண்டு. ஆகையினால் பொதுக்கட்டமைப்பு விவகாரமானது தென்னிலங்கையில் ஓர் இன வன்முறைக்கான சூழ்நிலைகளைக் கூட உருவாக்க முடியம்.

ஆனால் இத்தகையதொரு சூழ்நிலை தோற்றம் பெறுவதற்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற பௌத்த சிங்கள இனவாத சக்திகளின் செயற்பாடுகள் மட்டும் தான் காரணமா? இத்தகைய எதிர்ப்புக்கள் வெளிக்கிளம்பும் முன்னர் இவை செய்து முடிக்கப்பட்டிருக்க முடியாதா?

சிறிலங்கா ஆட்சியாளர்களில் இருவகைப்பட்டவர்கள் இருந் துள்ளனர். ஒரு தரப்பினர் தமது திட்டத்தின் படி செயற்பாடுகளை மேற்கொண்டு விட்டு எதிர்ப்புக்களை அடக்கி ஒடுக்கி விட்டவர்கள். மற்ற தரப்பினர் தமது திட்டங்களை ஆரம்பித்துவிட்டு பின் வாங்கியவர்கள்.

எடுத்துக்காட்டாக ஜே.ஆர்ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா போன்றவர்கள் தமது திட்டங்களை செயற்படுத்துவதில் தீவிரஅக்கறைகொண்டவர்கள். இந்தியா-சிறிலங்கா சமாதான உடன் படிக்கையை செய்து கொள்வதில் ஜே.ஆர் உறுதியாக இருந்தார். எதிர்ப்பையும் மீறி அதனை மேற்கொண்டார்.

இதேசமயம் எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கா, டட்லி போன்ற வர்கள் உடன்பாட்டைச் செய்துகொண்டாலும் பின்னர் அவற்றை தாமே உதாசீனம் செய்தார்கள். கிழித்தெறிந்தார்கள். அதாவது தாம் செய்துகொண்ட உடன்பாட்டைத் தாமே கிழித்தெறிந்தார்கள். இவ்வாறு இவர்கள் நடந்து கொண்டமைக்கு முக்கியமான காரணம் எதிர்ப்பாளர்களுக்கு வழங்கிய சந்தர்ப்பமே ஆகும். வேறு விதமாகக் கூறுவதானால் இவர்கள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இல்லா மையே காரணமாகும். ஆனால் இவ் விருதரப்பினரில் எவருமே தமிழ் மக்களின் நலனில் எப்பொழுதுமே அக்கறை கொண்டி ருக்கவில்லை.

இந்த வகையிலேயே பொதுக்கட்டமைப்பு விவகாரத்தையும் தற் பொழுது நோக்க வேண்டியதாகியுள்ளது. பொதுக்கட்டமைப்பு தொடர்பான விடயத்தில் சனாதிபதி சந்திரிகா உறுதியானவராக நடந்து கொண்டவராக இல்லை. தற்பொழுது பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு விட்டதாயினும் சனாதிபதி சந்திரிகாவிடம் இது தொடர்பாகக் குழப்பம் உள்ளது.

இதன் விளைவே சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள்அணிதிரள்வதற்கும், எதிரான போராட்டங்களை நடத்துவதற்கும் சந்தர்ப்பத்தையும், காலஅவகாசத்தையும் போதியஅளவில் வழங்கியுள்ளமையும் ஆகும். மேலும் சனாதிபதி சந்திரிகா எதிர்ப்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காமையும் காரணமாகும்.

இந்தநிலையில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படினும் கூட அக்கட்டமைப்பின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமா? அரசாங்கத்தரப்பு அதனை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்த முடியுமா? இதற்கு எதிரான போராட்டங்களை அரசாங்கம் தீவிர நடவடிக்கைகள் மூலம் ஒடுக்க முற்படுமா? என்பவை போன்ற கேள்வி களுக்குப்பதில் தேட வேண்டியது அவசியமானது. அவ்வாறு பதில் தேடப்படும் மட்டத்திலேயே பொதுக்கட்டமைப்பின் எதிர்காலம் குறித்து கணிப்புக்கூறமுடியும்.

# சுனாமிக்குப் பின்னான பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள்

நேற்று கைச்சாத்திடப்பட்ட சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை (P-Toms) தாபிப்பதற்கான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த அமைப்பின் கட்டமைப்பு செயற் பாடுகள் குறித்த முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

1. அமைப்பு

(அ) சுனாமிக்குப் பின்னரான பணியைத் திட்டமிடல், நடை முறைப்படுத்துதல், இயைபு படுத்துதல் ஆகிய நோக்கங்க ளுக்காக ஒருங்கிணைந்த தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டமைப்பு பின்வருவனவற்றைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

i. சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழு (உயர் மட்டக்குழு)

ii. ஆறு மாவட்டங்களுக்குமான சுனாமிக்கு பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழு (பிராந்தியக் குழு) அத்துடன்

iii. அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோண மலை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழுக்கள் (மாவட்டக் குழுக்கள்)

ஆ. உயர்மட்டக் குழுவும், பிராந்தியக் குழுவும், மாவட்டக் குழுக்களும் சுனாமி அனர்த்த வலயத்தின் உள்ள (சு.அ.வ)) (TDZ) சகலரதும் துயரங்களைக் கருத்திற் கொள்ளக் கூடியவாறான முறை ஒன்றில் அவற்றின் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். என்பதுடன் இனப் பூர்வாங்கம், பால் நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், சமூகப் பூர்வாங்கம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற ஏதுக்களின் மீது எந்த ஒரு நபருக்கும் எதிராகப் பாரபட்சமின்றி செயற்பட வேண்டும்.

### 3. நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி

(அ). இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு திறத்தவர்களாலும், அது நிறைவேற்றப்படும் திகதியிலிருந்து (தொடங்கும் திகதி) வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் தொடங்கும் திகதிலியிருந்து ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கு தொடர்ந்து நடைமுறையில் இருத்த லும் வேண்டும்.

(ஆ). திறத்தவர்களின் உடன்பாட்டின் மூலம் இப் புரிந்து ணர்வு ஒப்பந்தத்தை மேலும் ஒரு காலப்பகுதிக்கு அல்லது காலப் பகுதிகளுக்கு நீடிக்கும் விருப்புத் தெரிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 5.உயர் மட்டக்குழு

அ. புவியியல்நோக்எல்லை:- உயர் மட்டக் குழு பிரத்தியேகமாக ("சு.அ.வ') தொடர்பில் செயற்படுதல் வேண்டும்.

ஆ. பணிகள் உயர் மட்டக் குழு பின்வரும் பணிகளைப் புரிதல் வேண்டும்.

i. சு.அ.வ இல் உதவி வழங்குனர்களின் நிதிகளின் சமமான ஒதுக்கீட்டிற்கும், செலவீட்டிற்கும் உயர் மட்டக் குழுவின் கொள்கை வகுத்தல் அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேவை மதிப்பீடுகளின் அடிப்படையிலும், பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக் கையினதும், பேத அளவினதும் விகிதாசாரத்தின் அடிப்படையிலும், ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் என்ற கோட்பாட்டினால் வழி நடத்தப்படல் வேண்டும்.

ii. மதியுரை சேவைகளை வழங்குதல் அத்துடன்.

iii. ('P.TOms") கட்டமைப்பின் பணிகளைக் கண்காணித்தல்.

இ. அமைப்பு உயர் மட்டக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. 1இ.அ இன் நியமத்தர்

ii.1த.ஈ.வி.பு நியமத்தர்

iii. 1 முஸ்லிம் கட்சிகளின் நியமத்தர்.

(ஏ) **அமைவிடம் :-** உயர் மட்டக் குழு கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும்.

### 6. பிராந்தியக் குழு

அ. புவியியல் நோக்கெல்லை பிராந்தியக் குழு பிரத்தியேகமாக ஆறு மாவட்டங்களில் உள்ள சு.அ.வ வின் இடப்பரப்பிற்குள் செய லாற்றுதல் வேண்டும்.

ஆ. பணிகள் பிராந்தியக் குழு பின்வரும் பணிகளைப் புரிதல் வேண்டும்.

i. சுனாமிக்குப் பின்னரான அவசர கால நிவாரணம் புனர்வாழ்வு, புனர்நிர்மானம் அத்துடன் அபிவி ருத்தி வழிமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் அவற்றிற்கு முன்னுரிமை அழிப்பதற்குமான தந்திரோபாயங்களை விருத்தி செய்தல்.

ii. சுனாமிக்குப் பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் அத்துடன் அபிவிருத்தி என்பவற்றிற்கான கருத்திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட அங்கீகாரமும், முகாமைத்துவமும்.

iii. கருத்திட்டங்களின் முழுமையான கண்காணிப்பு அத்துடன்

iv பிரிவு 7 இல் குறித்துரைக்கப்பட்டவட்டவாறு வரைவிலக்கணம் கூறப்பட்ட நிதி தொடர்பில் நிதி முகாமைத்துவம்.

இ. அமைப்பு:- பிராந்தியக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. இலங்கை அரசாங்கத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரு உறுப்பினர்களில் ஒருவர் பிரதித் தவிசாளராக சேவையாற்றுவார்.

ii. த.ஈ.வி.புு களினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக சேவையாற்றுவார்.

iii. முஸ்லிம் கட்சிகள் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களின் ஒருவர் பிரதி தவிசாளராக சேவையாற்றுவார் பிராந்தியக் குழு தகுந்த ஆள் வலுச் சமநிலை ஒன்றைகொண்டிருக்க வேண்டும்.

**அமைவிடம்**

பிராந்தியக் குழு கிளிநொச்சியில் அமைந்திருத்தல் வேண்டும்.

(எ) நடவடிக்கை முறைகள், பிராந்தியக் குழு, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறைகளை உயர்மட்டக் குழுவுடனான கலந்தாலோசனை யுடன் தீர்மானித்தல் வேண்டும்.

(ஏ) சேவையாற்றும் செயலகம், ஆறு மாவட்டங்களுக்குமான சிறிய செயலகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்பதுடன் உடனடி மனிதநேய மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான செயலகத்தி லிருந்து (உ.ம.பு.தே.செ)( (SIHRN) பணியாட் தொகுதியினர் பெறப்படலாம். இச்செயலகம் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பிராந்திய செயலகம் சு.பி.க.பு.சு.பி.செ (RSPCRD) எனப் பெயரிடப்படல் வேண்டும் என்பதுடன் பிராந்தியக் குழுவிற்கு செயலக, நிர்வாக சேவைகளைப் புரிதலும் வேண்டும்.

**8.மாவட்டக்குழுக்கள்:-**

(அ) புவியியல் நோக்கெல்லை. மாவட்டக்குழு ஒவ்வொன்றும் பிரத்தியேகமாக தத்தமது மாவட்டத்திற்குபட்ட சு.அ.வ இடப்பரப்புக்கள் தொடர்பில் செயலாற்றுதல் வேண்டும்.

(ஆ) பணிகள், மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

1.. தேவைகளை இனங்காணுதல

II.தேவைகளை முன்னுரிமைப் படுத்துதல்.

iii.பல்வேறு பங்காளிகளிடமிருந் தும் கருத்திட்டப் பிரேரணைகளை பிறப்பித்தலும், பெறுதலும், கணிப்பீடுசெய்தலும், முன்னுரிமைப்படுத்தலும், அத்துடன் பிராந்தியக் குழுவிற்கு விதப்புரைகளை சமர்ப்பித்தலும், அத்துடன்

iv.கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அதனைப் பற்றி பிராந்தியக் குழுவிற்கு அறிக்கையிடுதலும்.

(ஈ) அமைவிடம் மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற் குள் அமைந்திருத்தல் வேண்டும்.

# சொந்த இடங்களில் மீள்குடியமர வலியுறுத்தி

# யூலை 10 முதல் தொடர் போராட்டங்கள்!

## -வலி.வடக்கு மக்கள் நேற்று தீர்மானம்

(நல்லூர்)

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொடர் போராட்டங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் மேற்கொள்வ தென தீர்மானித்துள்ளனர்.

நேற்றுக் காலை 11.30 மணிக்கு யாழ்.மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் க.கணேசு தலைமையில் சுன்னாகம் ஐயனார் கோவில் மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களை இழந்து அகதிகள் என்ற நிலையில் அலைந்து திரியும் அவலமான வாழ்க்கையே காணப்படுகின்றது.

இதேநேரம் அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் மக்களுடைய பிரச்சினைகள் மீள்குடியேற்றங்களை மேற்கொள்வதில் கவனம் எடுக்கவில்லை. இதற்குப் பதிலாக உயர்பாதுகாப்பு வலயம் எனக்கூறி இராணுவத்தின் நலன்களையே கவனிக்கின்றது.

இந்நிலைமையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எமது வீட்டிற்கு நாம் செல்ல வேண்டும். இதற்கு தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டங்களான ஆர்ப்பாட்டப் பேரணிகள், உண்ணாவிரதங்கள், மறியப்போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக தீர்மானித்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பல நூற்றுக்கணக்கான இடம் பெயர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். (41)

# திருமலை த.ம.பேரவைத் தலைவரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு!

## நேற்றிரவு சம்பவம்

(திருமலை)

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனின் வீட்டின்மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரவு 8.45மணியளவில், திருகோணமலை நகரத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் அன்புவழிபுரத்திலுள்ள விக்னேஸ்வரனின் வீட்டின்மீதே இந்தக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரவுவேளையில் விக்னேஸ்வரனின் வீட்டுக்கு வந்த சிலர், வட்டுக்கு முன்புறத்தில் நின்று தமிழில் விக்னேஸ்வரனின் மைத்துனருடன் உரையாடிக்கொண்டே, கைக்குண்டு ஒன்றை வீட்டை நோக்கி உருட்டிவிட்டதாகவும், எனினும் இந்தத் தாக்குதலினால் எவருக்கும் உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படாதபோதிலும், விக்னேஸ்வரனின் வீட்டுக்குச் சிறிதளவு சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து இரவு 9.35மணியளவில் அன்புவழிபுரம் சந்தியில் ரயர்க் கடையொன்றுக்கு பின்புறமாக மற்றுமொரு கைக்குண்டுத தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தென்னிலங்கையில்....

ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தலைநகரின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறினார்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்ட சூழலில் மேலும் வன்முறைகள் வெடிப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு என்று கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான அதிருப்தியாளர்கள் வன்முறைகளைத் தூண்டிவிட்டு மற்றைய தரப்பினர் மீது பழிபோடும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் இயல்பு நிலையை சீர்குலைத்துவிட்டு தாம் அரசை விட்டு விலகியதற்கு ஜே.வி.பி அர்த்தம் கற்பிக்க முயலக்கூடும் என்றும், நாட்டின் பாதுகாப்புக் குறித்து சனாதிபதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பழிபோடவும் அக்கட்சி முயலலாம் என்றும் கூறப்படுகிறது.

கிழக்கில் முஸ்லிம் மக்களைத் தூண்டிவிட்டு இனங்களுக்கு இடையிலான கலவரத்தை உண்டு பண்ணவும் சில அந்நிய சக்திகள் சதி முயற்சியில் இறங்கலாம் என்பதால் அங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்துவது குறித்து படை வட்டாரங்கள் ஆலோசித்து வருகின்றன.பொதுக்கட்டமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை ஜே.வி.பியின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற் சங்கங்கள் தொடங்கியுள்ளன.

அரச அலுவலகங்களுக்கு முன்பாக கறுப்புக்கொடிகள் கட்டி பொதுக்கட்டமைப்பு குறித்த தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றன.

அத்துடன் நாடெங்கும் சுமார் 614 கிளைகளைக் கொண்டுள்ள ஜே.வி.பியின் சிங்கள வர்த்தக சங்கங்கள், சிங்கள இளைஞர் அணிகளைக் கொண்ட வீரவிதான ஆகியவை இது போன்ற குழப்ப காலங்களில் வன்முறை வெறியாட்டங்களை கட்டவிழ்த்துவிடக்கூடும் என்பதாலும் சிறிலங்காப் பாதுகாப்பு தரப்பினர் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# தனித்து இயங்க முடிவு

ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான உடுவே தம்மாலோக்கதேரா தனித்து இயங்க முடிவு செய்துள்ளதாக சபாநாயகர் லொக்குபண்டாரவிடம் தெரிவித்தார். எதிர்க்கட்சி கொறாடா மகிந்த சமரசிங்க விடம் எதிர்க்கட்சி வரிசையில் உடுவே தம்மாலோக்க தேரருக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யுமாறு சபாநாயகர் கேட்டுள்ளார்

### பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தானதை....

யோகத்தினை மேற்கொண்டனர்.

திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகே நேற்றுக்காலை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டதுடன், திருமலை நகரை நோக்கி வருவதற்கும் முயன்றுள்ளனர். அவர்களைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பிரயோகித்ததால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசார் மீது கற்களையும், பொல்லுகளையும் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது இரு பொலிஸ் வாகனங்கள் சேதமடைந்தன. கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசப்பட்டதால் திருமலை சந்தையில் இருந்த வியாபாரிகள் தங்களின் பொருட்களை கைவிட்டு சிதறி ஓடினர்.

கண்ணீர்ப்புகைக்குண்டுகளினால் சிதறியோடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆங்காங்கே குழுமியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்திற்கு அருகே சிங்களஅமைப்பினர் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

சிறிலங்கா மின்சாரசபை, துறைமுக அதிகாரசபை உட்பட பெரும்பாலான அரச நிறுவனங்களில் நேற்றுமதிய உணவு நேரத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

பதுளை., கண்டி, கினிகத்ஹேன, உட்பட பல இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. சில இடங்களில் பொலிசார் கறுப்புக் கொடிகளை அறுத்தெறிந்துள்ளனர்.

அத்தியாவசிய தேவைகள் தவிர்த்து கொழும்பு கோட்டைப் பகுதிகளுக்கு வாகனங்களைக் கொண்டு வரவேண்டாம் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.கொழும்பு கோட்டைப் பகுதியில் முதல் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால் வாகன சாரதிகளை மாற்றுப் பாதைகளினூடாக செல்லு மாறு பொலிசார் தெரிவித் துள்ளனர்.

# தேர்தல் திகதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு இல்லை

## -ஐ.தே.க வலியுறுத்து

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக் கான திகதியை முடிவு செய்யும் அதிகாரம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி சாடியுள்ளது.கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐ.தே.க பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் கூறியதாவது; சனாதிபதித் தேர்தல் திகதி குறித்து சந்திரிகா குமாரதுங்க பலமுறை குறிப்பிட்டுப் பேசிவருகிறார். தேர்தல் திகதியை முடிவு செய்யும் அதிகாரம் தேர்தல் திணைக்களத்தின் ஆணையாளரின் தனிப்பட்ட சிறப்பு அதிகாரம் அது.இது அரசியல் யாப்பில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டு காலம் பதவியிலிருந்த பின்னர் அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான திகதியை மட்டும் சனாதிபதி தீர்மானிக்க முடியும். இரண்டாவது பதவிக் காலமும் முடிந்த பின்னர் தேர்தல் திகதியை தேர்தல் திணைக்களம் மட்டுமே தீர்மானிக்கும். ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தைப் போல் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளே நிறைந்து இருக்கின்றன. அரசு சிறுபான்மை யாக இருந்தாலும் நாம் அதை அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தவோ, கவிழ்க்கவோ முயற்சிக்க மாட்டோம் பாராளுமன்றமோ அமைச்சர வையோ இல்லாமல் அடுத்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப் படும் வரை அரசை நடத்த முடியும் என்றும் ஜனநாயகம் என்பது 51 வீதத்தினரின் ஒப்புதல் மட்டுமே என்றும் கூறிவருகிறார். அவரது இந்த முடிவை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. நாடு எதிர்நோக்கியிருக்கும் இது போன்ற சிக்கலான நேரத்தில் மக்களின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த பாராளுமன்றம் அவசியம். அதை முடக்கி வைக்கக்கூடாது என்றார் அவர்.

### சமாதானப்...

இடையேயான முதலாவது ஒப்பந்தம்.

சிறிலங்கா அரச தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் தேசிய மற்றும் மாவட்ட அளவில் இணைந்து செயற்பட ஒப்புக்கெண்டுள்ளனர். நிர்வாக ரீதியாக முஸ்லிம் தரப்புக்கு சிறப்புப் பிரதிநிதித்துவம் முதல் முறையாக அளிக்கப்பட்டவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு கையெழுத்திடப்பட்டு விட்டநிலையில் சர்வதேச நாடுகள் தங்களது அரசியல் மற்றும் நிதி ஆதரவை இலங்கைக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுக்கட்டமைப்பு மீது முஸ்லிம் தரப்பினர் மற்றும் ஜே.வி.பி உள்ளிட்டோரிடமிருந்து விமர்சனங்கள் இருப்பது உண்மைதான்.

பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்துகிற சூழலிலேயே 2003 ஆம் ஆண்டு ஏப்ரலோடு முடங்கி நிற்கும் அமைதிப்பேச்சுகளையும் விரை வாக மீளத் தொடங்க வேண்டும்.

இந்த அனுசரணையாளர் பணியில் எவர் பக்கமும் சார்பாக நிற்பது பாரிய நெருக்கடியானது. பலஸ்தீனப் பிரச்சினையில் நாம் பலஸ்தீனியர்களைஆதரிக்கிறோம் என்று ஒரு தரப்பினரும், மற்றோர் தரப்பினர் இஸ்ரேலை ஆதரிக்கிறோம் என்றும் கூறுகின்றனர் இத்தகைய அச்சுறுத்தல்கள் விமர்சனங்கள் இல்லாதிருந்தால் நாம் ஆக்கப்பூர்வமான பணிகளை முன்னெடுத்துச்செல்ல முடியாது.

தற்போதைய இலங்கைச் சூழலில் யுத்த நிறுத்தம் வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றபோதும் படுகொலைச் சம்பவங்களால் அதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. ஆதலால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மிகக் கடுமையாக கண்காணிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றார் அவர்.

முன்னதாக புதுடில்லியில் இந்திய வெளியுறவுச் செயலாளர் சியாம் சரணை விதார் ஹெல்கேசன் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின் போது நேற்றுக் கையெழுத்தான பொதுக்கட்டமைப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டதாக புதுடில்லிச்செய்திகள் தெரிவிக்கின்றன.

### பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை....

பாதிக்கப்பட்ட அனைத்துத்தரப்பு மக்களுக்கும் நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கப்படுவது மிக அவசியம் எனவும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சர்வதேச சமூகம், நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் உதவியாக கிடைக்கும் நிதிகள் நாடு முழுவதும் நிவாரணப் பணிகளுக்கு சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்துக் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இந்த நிவாரண உதவிகளை கண்காணிப்பதற்கு நியமிக்கப்படும் உயர்மட்டக் குழுவில் அரசாங்கம், விடுதலைப்புலிகள், முஸ்லிம் கட்சிகள் ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பொதுக்கட்டமைப்பு...

காவிற்கான நோர்வே தூதுவர் காண்ஸ்பிரஸ்கர் நேற்று நண்பகலுக்கு சற்றுப்பின்னராக உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி வந்து சேர்ந்தார்.

கிளிநொச்சிக்கு வந்தடைந்த கான்ஸ்பிரஸ்கரை சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார்.பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே பாலகுமாரன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், திட்டமிடல் செயலகப் பிரதிப்பணிப்பாளர் ரஞ்சன் ஆகியோருடன் கான்ஸ் பிரஸ்கர் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தையடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பாக திட்டமிடல் செயலக பிரதிப்பணிப்பாளர் ரஞ்சன் பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திட்ட பிரதி நோர்வே, தரப்பிடம் கையளிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மற்றும் சிறிலங்கா அரசு ஆகிய இருதரப்பினருக்கும் இடையில் மட்டுமே இநதப் பொதுக்கட்டமைப்பு கையெழுத்தாகியுள்ளது.

மூன்று பிரதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பாக ரஞ்சன் கையெழுத்திட்டார். ஒரு பிரதி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசு மற்றும் நோர்வேத்தரப்பு ஆகியவற்றுக்கு இருபிரதிகளும் கையளிக்கப் படவுள்ளன.

### வீரவணக்கம்...

கிருஷ்ணன் கோயிலடி மடத்தடி திருகோணமலை) என்ற போராளியே சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்து கின்றனர்.

### வீரச்சாவு...

அன்பு குடியிருப்புத்திட்டம் புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) என்ற போராளியே வீரச்சா வடைந்தவராவார்.

22.06.1998 அன்று கதிரவெளியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தின் விமானத்தாக்குதலின் போது த.தே.து.வீ ஒருவா வீரச்சாவ்டைந்துள்ளார்.

த.தே.து.வீ தவராசா (சந்திரசேகரம்-தவராசா அதியமான் கேணி லிங்கபுரம் கிளிவெட்டி) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### பொதுக்கட்டமைப்பு வரைவை...

வரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். இது இவ்வாறிருக்க பாராளுமன்றத்திற்கு வெளியிலும், ஜாதிகஹெல உறுமயவினரும், ஜே.வி.பி யினரும் அவர்களின் ஆதரவாளர்களும் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வார்ப்பாட்டத்தைக் கலைக்கும் நோக்குடன் கலகம் அடக்கும் படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சை மேற்கொண்டனர். அங்கிருந்த ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சிற்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்ற சூழலில் பாரிய அளவில் பொலிசார், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவக் கொமாண்டோக்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம் சனாதிபதி மாளிகைக்கு செல்லக்கூடிய சகல வழிகளும் மூடப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் படையினரும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் ஏதாவது வன்முறைகள் இடம்பெற்றால் அதனைத் தடுப்பதற்கு சிறிலங்காப் படைகள் தயார்நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 திகதி அச்சிட்டு வெியிடப்பட்டது